உ

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

பதிப்பாசிரியர்

எஸ். ஸ்ரீநிவாஸையர்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர்

நூல் நிலையம்

சென்னை-41

1982

திருநின்றவூர் திருமலை

அத்தங்கி தாதாரியர் தொண்டன்

இயற்றிய

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

பதிப்பாசிரியர்

எஸ். ஸ்ரீநிவாசையர்

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-600 041.
1982

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண் : 72

முதற்பதிப்பு:—1982. 1000 பிரதிகள்.

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

விலை :—ரூ. 10-00

Published with the Financial assistance from the
Government of India, Department of Culture—New Delhi

Printed at RAJAN & Co. (Printers) 1, Goomes Street, Madras-1

PREFACE

The present work '*Nūrreṭṭu Thiruppati Antādi*' (108 sacred Vaishnavite Shrines), is an *antādi* text (the end word of a verse appearing as the beginning of the next verse) giving in each verse eight important points connected with each sacred place, namely. –

1. The name of the main deity, 2. The name of the Sacred tank 3. The name of the temple structure, 4 The name of the Goddess 5. The direction the presiding deity is facing. 6. The posture of the god 7. The name of the god and 8. The name of the sacred place.

It is a sincere attempt on the part of the poet to give in a compact verse all that is required about the sacred Vaishnavite kshetra for a pilgrim.

The name of the author is given in the colophon as Thirumalai Attangi Tātāryar Tondan of Thiruninravur. Neither the date of the poet nor other details about his life and contributions are known. The text as printed here is found in a palm leaf manuscript No. 1030 preserved in the Dr. U. V. Swaminatha Iyer Library. The text has been edited with notes by Sri S. Srinivasa Iyer. The Dr. U. V. Swaminatha Iyer Library is thankful to him for having agreed to edit this text.

The publication is brought out with the liberal grant of the Cultural Ministry of the Government of India. The Library is thankful to the Government of India for its continued support and encouragement for research.

R. NAGASWAMY

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

முகவுரை

அந்தாதி :

தமிழிலுள்ள 96 வகைப்பிரபந்தங்களில் அந்தாதி என்பது ஒன்று. நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும்படி அமைத்துப்பாடி, இறுதிப் பாடலின் இறுதியும் முதற்பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்ட லித்து, மாலைபோலத் தொடுத்து முடிப்பது அந்தாதி எனப்படும். ஒரு செய்யுளின் அந்தம் (முடிவு) அடுத்த செய்யுளின் ஆதி (முதல்) யாக வருவது. இதைத் தொடர்நிலைப் பாடல் அல்லது சொற்றொடர்நிலை என்று வழங்குவர்.

அந்தாதிச் செய்யுட்களின் தோற்றம் :

தொல்காப்பியர் பிற்காலத்தில் தோன்றும் இலக்கியவடிவங் களுக்கு முன்கூட்டியே 'விருந்து' (புதுமையானது) எனப் பெயரிட்டு ஒரு நெறியை வகுத்தனர். (தொல். செய். 239) ஆயினும் அந்தாதிச் செய்யுட்கள் காலத்தால் பிற்பட்டவை என்பது சில இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் முடிவு.

பிற்காலத்தில் பிரபந்த உருவில் ஒரு தனி வடிவமுடையதாகத் தோன்றிய அந்தாதி நூல்களுக்குக் கரு சங்க நூல்களிலேயே நாம் காண்கிறோம். ஒரு செய்யுளுக்குள்ளேயே ஓரடியின் இறுதி மற்றையடிக்கு முதலாக அமையும்படி தொகுப்பதும் உண்டு. புறநானூற்றில் இரண்டாம் பாடலாக முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடலின் முதல் ஐந்து வரிகள்—

"மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும்..." என

அந்தாதி தொடையாக அமைந்துள்ளன.

பதிற்றுப்பத்தில் நான்காம்பத்து அந்தாதியாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதியில் உள்ள சொற்களும் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

செய்யுள் இறுதி	அடுத்த செய்யுளின் தொடக்கம்
மாண்டனை பலவே	மாண்டனை பலவே
இரும்பூதாற் பெரிதே	இரும்பூதாற் பெரிதே
ஒருஉப நின்னே	ஒருஉப நின்னே
புரைசால் மைந்தநீ யோம்பல்மாறே	புரைசால் மைந்த நீயோம்பல் மாறே
வீயர்யாணர் நின்வயினானே	வீயாயாணர் நின்வயினானே
வாழ்கநின் வளனே	வாழ்க நின் வளனே
உலகத்தோர்க்கே	உலகத்தோரே
பிறர்க்கென வாழ்தி நீ யாகன் மாறே	பிறர்க்கென வாழ்தி நீ யாகன் மாறே
பேர்ர் நிழற் புகன்றே	பேரர் நிழற் புகன்றே

இது அந்தாதி என்பதில் ஐயமிருக்கமுடியாது. இதில் ஒரு சொல், இரு சொற்கள், மூன்று சொற்கள் அல்லது அடிமுழுமையும் அடுத்த செய்யுளின் முதலாக வருகின்றதைக் காண்கிறோம். ஆயினும் இறுதிப் பாடலின் அந்தம் முதல் பாடலின் ஆதியோடு மண்டலிக்கவில்லை.

நாட்டுப் பாடல்களில் ஒன்றாகிய ஏற்றப்பாட்டில், தொடுத்த சொல்லையே பிடித்துத் தொகுத்துத் தனியந்தாதியாக முடிப்பதும் உண்டு.

"மூப்ப துடனெடுத்து மூங்கிலி லைமேலே
மூங்கி லிலைமேலே தூங்கும் பனி நீரே
தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே"

என்பது அத்தகைய தனியந்தாதிப்பாட்டு.

ஔவையார் பாடிய

" வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடி உயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான் "

என்பதும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது.

அம்மானை, அம்பாவை போன்ற நெடும்பாடல்களான நாட்டுப்புற இலக்கியங்களில், இடையிடையே சில அடிகள் அந்தாதியாக வருவதுண்டு. காஞ்சி காமாட்சி அம்மன் அம்பாவைப்பாட்டில்

"நாமிருந்து பூசைகொள்ளும் நற்பதிகள் பலகோடிகளாம்
அப்பதியி லுயர்ந்தபதி ஆயிரத் தெட்டுகளாம்
ஆயிரத் தெட்டுள்ளும் அதிகநலம் நூற்றெட்டாம்
அதிக நூற்றெட்டுக்குள் அறுபத்தெட் டுத்தலமாம்
அறுபத்தெட்டு நற்பதியில் அரும்பதிகளிரண்டாம்
அவ்விரண்டுமேதென்றால் அழகுகாசி காஞ்சியாம்
காசி காஞ்சி இரண்டுக்குள் காஞ்சியே மேலாகும்
காஞ்சியிலே எப்பொழுதும் காதலாய் நாமிருப்போம் (142-152)

என்ற வரிகள் இதனைப் புலப்படுத்தும்.

மூன்று பெண்கள் ஆடும் அம்மானையில், முதற் பெண்ணின் உரைக்கு இரண்டாவது பெண் விடுக்கும் வினா அந்தாதியாக அமைகிறது.

இரட்டையர் பாடிய பாடலொன்றில்

"ஈசன் பசுவாகி எமன் இளங்கன்றாகி
வீசுபுகழ் ஆரூர்வீதி வந்தார் அம்மானை
வீசுபுகழ் ஆரூர் வீதிவந்தார் ஆமாயின்
காசுக்கு வீசம் கறக்குமோ அம்மானை."
கன்றை உதைகாலி கறக்குமோ அம்மானை

முதலிரண்டு கண்ணிகள் அந்தாதியில் அமைந்துள்ளன.

அந்தாதியின் வளர்ச்சி:-

கலம்பகம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, நவரத்னமாலை முதலிய பல்வேறு நூல்களும், சித்தர்கள் இயற்றிய மருத்துவ நூல்களிற் பலவும், திருவாசகத்தின் கண் உள்ள திருச் சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியனவும், திருவாய் மொழியும், திருமூலர் திருமந்திரத்தில் பல தந்திரங்களும் ஆகிய இவையும் இவைபோன்ற பல அரிய நூல்களும் அந்தாதியாக இயற்றப்பட்டிருப்பினும், அவைகளெல்லாம் வெவ்வேறு காரணங்களில் சிறப்புப் பற்றி வேறுவேறு பெயர்கள் பெற்றன. எனினும் அந்தத்தை ஆதியாகக் கொண்டு வரும் ஒரு சிறப்பினைப்

பற்றிஅந்தாதி எனப்பெயர் பெற்ற நூல்களே அந்தாதி என வழங்கப் பெறும்.

அந்தாதி முறை வைணவ ஆழ்வார்களால் மிகச் சிறப்பாக்க் கையாளப்பட்டது. பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற முதலாழ்வார்கள் மூவர் பாடல்களும் இயற்பா எனப்படும். இவையும், திருமழிசையாழ்வார் அருளிச் செய்த நான்முகன் திருவந்தாதி என்னும் நூலும், நம்மாழ்வார் அருளிச் செய்த பெரிய திருவந்தாதி என்பதும் மண்டல அந்தாதி வகையில், அதாவது இறுதிப் பாடலில் இறுதி முதல் பாடலின் தொடக்கமாக வந்துள்ளன. முதலாழ்வார்கள் மூவரும் கி.பி. 6, 7-ம் நூற்றூண்டைச் சார்ந்தவர்கள் என்பர். ஆதலின் தமிழில் அந்தாதி பிரபந்த வகையில் உருவானது கி.பி. ஆறும் நூற்றூண்டு என்பர்.

நக்கீர தேவ நாயனுர், கபிலதேவ நாயனுர், பரணதேவ நாயனுர் ஆகிய மூவரும் இயற்றிய அந்தாதிகள் பதினேருந் திருமுறையின் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மூவரும் சங்ககாலத்துக்கபில பரண நக்கீரரின்றும் வேருனவர் எனக்கருத்தும் கொள்கையும் உண்டு. அவர் கொள்கைப்படி இவர்கள் பாடிய அந்தாதிகள் 6-ஆம் நூற்றூண்டின் தொடக்கத்தில் தோன்றியவை என்று கொள்ளலாம்.

சங்ககாலத்துத் தொகை நூல்களுள் புறநானூறு, சிறுபாணுற்றுப்படை, பதிற்றுப்பத்து ஆகியவற்றுள் அந்தாதித் தொடைவந்திருந்தாலும், இதையொட்டிய 6-ஆம் நூற்றூண்டின் முற்பகுதியிலேயே சில ஆழ்வார்களும், சில நாயன்மார்களும் அந்தாதி நூல்களை இயற்றியுள்ளதாலும் அந்தாதியின் காலம் மிகப்பழமையானது என்பது நன்கு புலனுகும்.

அந்தாதிக்கு இலக்கணம் வகுத்த பிற்காலத்தில் முதல் பாடலின் முதலில்வருவதையே கருத்திற்கொண்டனர். 'அந்தம் முதலாக தொடுப்பது அந்தாதி' என்கிறது யாப்பருங்கலக் காரிகை-17.

"அடிதொறும் ஓரடி இறுதிக்கண் நின்ற
எழுத்தானும் அசையானும், சீரானும்
அடியானும் மற்றையடிக்கு ஆதியாக
தொடுப்பது அந்தாதித் தொடை" என்கிறது குணசாகரர்
உரை.

"அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாக செய்யுள் மொழியின்
அஃது அந்தாதித் தொடை" என்கின்றது மாயேச்சுரர்
யாப்பருங்கலக் காரிகை மேற்கோள் (பக்கம் 50)

ஆகவே அந்தாதியின் கரு சங்க நூல்களிலே இருந்தது என்பதும், மண்டல அந்தாதி வகை காலத்தால் பிற்பட்டது எனக் கொள்வதிலும் தவறில்லை.

அந்தாதியின் வகைகள்;-

அந்தாதியின் வகைகளில் அந்தாதி, அந்தாதித்தொடை, மண்டல அந்தாதி என்னும் பிரிவுகளைப் பார்த்தோம்.

யாப்பு வகையை ஒட்டிப்பிற்காலத்தில் பல அந்தாதி நூல்கள் உருவாயின. நேரிசை வெண்பாவினால் இயற்றப்பட்ட அந்தாதி நூல்கள் வெண்பா அந்தாதி எனப்பெறும். கட்டளைக்கலித்துறை பாடல்களால் பாடப்பெறும் அந்தாதி நூல்கள் கலித்துறை அந்தாதி எனப்பெயர் பெறும். ஒருவகை ஓசைக்குப் பத்தாகப், பத்துவகை ஓசையில் பலவகை விருத்தங்களால் பாடப்பெறும் நூல்கள் பதிற்றுப்பத்தந்தாதி எனப்படும். வண்ணமும் கலை வைப்பும் தவறாமல் பதினாறு பாடல் அந்தாதியாக இயற்றும் நூலுக்கு ஒலியல் அந்தாதி எனப்பெயர் வழங்கினர். அவ்வாறே முப்பத்திரண்டு கலை வைப்பு ஓர் பாடல், அமையப் பெற்று முப்பது பாடல்கள் அந்தாதியாக வருவதைக் கலியந்தாதி என்றனர்: அடிதொறும் முதற் சீர் மடக்காகவரும் யமக அந்தாதியும், திரிபந்தாதியும் பின்னர் தோன்றின. திரிபும் யமகமும் ஒரே அந்தாதியில் கலந்து வருவதும் உண்டு. ப,ம, என்ற இரு எழுத்துக்கள் நீங்கலாகப் பிற எழுத்துக்களால் அமைந்த சொற்களைக் கொண்டு உதட்டோடு உதடு படாமல் பாடக்கூடிய அந்தாதி நூல்கள் நீரோட்டக அந்தாதி அல்லது இதழ் அகல் அந்தாதி என்றனர் (ஒட்டம், ஓஷ்டம் - உதடு) இப்படிப்பல்வகை யாப்பாலும் அந்தாதிகள் விரிவு பெற்றன.

அந்தாதி நூல்களின் எல்லை:-

முதலில் தோன்றிய அந்தாதி நூல்களெல்லாம் நூறு பாடல்களைக் கொண்டே அமைந்தன. ஆயினும் நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதி 87 பாசுரங்களைக் கொண்டது. திருமழிசையாழ்வார் பாடிய நான்முகன் திருவந்தாதி 96 பாடல்களைக் கொண்டது. திருவரங்கத்தமுதனார் பாடிய இராமனுஜர் நூற்றந்தாதி 108 பாடல்களைக் கொண்டது. பிற்காலத்தில் தோன்றிய சரசுவதி, அந்தாதி, திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதிகளின் செய்யுள் தொகை முப்பதேயாகும். மாதவ சிவஞான யோகிகள் அருளிய திருவேகம்பரந்தாதி 94 செய்யுட்களைக் கொண்டது.

அந்தாதிப் பிரபந்தங்கள்:-

ஆழ்வார்கள் பாடிய அந்தாதிகளை அடுத்து நக்கீர தேவ நாயனார் இயற்றிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி நல்ல நோக்குடையதாய் உள்ளத்தை உருக்கும் தன்மையுடையது. கபில தேவநாயனாரும், பரணதேவ நாயனாரும் 'ஒன்று' என்று தொடங்கி 'ஒன்று' என்று முடித்துச் 'சிவபெருமான்' திருவந்தாதி' என இருவரும் ஒரு பெயரிட்டு இரு நூல்களை செய்துள்ளனர். இவ்விரண்டு நூல்களிலும் உள்ள வெண்பாக்களில் இரண்டு இரண்டு அடிகள் யமகமாக அமைந்துள்ளன. இவையே பின்னால் யமக அந்தாதி பாடுவதற்கு வழிகாட்டி எனலாம்.

பின்னர் காரைக்கால் அம்மையார் பாடிய 'அற்புதத் திருவந்தாதி' சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'பொன் வண்ணத்தந்தாதி' என்ற அந்தாதி நூல்கள் வெளிவரத் தொடங்கின திரு நூற்றந்தாதி என்பது சமண சமயத்தவரால் இயற்றப்பட்டது.

இவற்றையடுத்து, சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையை விரித்து நம்பியாண்டார் நம்பி இயற்றிய "திருத் தொண்டர் திருவந்தாதி" கட்டளைக் கலித்துறையால் அமைந்து வரலாற்றுச் சிறப்பெய்தி நிற்கின்றது.

திருச்சிராப்பள்ளிக் குன்றின்மேல் பல்லவர் காலத்து அமைந்த குடைவரை மதில்களில், பாயிரம் உட்பட 104 பாடல்களாகிய அந்தாதி நூல் ஒன்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் எழுத்தமைதி கொண்டு 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் இந்நூல் வரையப் பட்டதாதல் வேண்டும் எனச் சாஸன அறிஞர் கருதுவர். இவ்வந்தாதி பாடியவர் மணியன் மகன் நாராயணன் என்பார். இவர் மதுரை, மணலூர், வேம்பை, சேய்ஞலூர், குண்டூர் என்ற ஊர்களில் தலைமை பெற்றிருந்தவர் என்று தெரிகின்றார். இவ்வந்தாதிக் கலித்துறைகள் பொன்வண்ணத் தந்தாதி முதலியன போலவும், துதிகளாகவும் அகத்துறைப் பொருளுடையனவாகவும் உள்ளன. நூறுவது பாடலின் இறுதிச் சொல் (உலகத்துளே) முதல் பாடலின் முதல் சொல்லான உலகம் என்றே வருகிறது. ஆதலின் இது மண்டல அந்தாதி வகையில் சேர்ந்தது. கல்வெட்டு இப்பாடலைக் 'கற்பந்தல் நிழலின் வைத்த கலித்துறை' எனக் கூறுவது கண்டு இன்புறத்தக்கது. 'கற்பந்தல் என்று குடைவரைக் கோயில் சிறப்புடன் புதுமையாகக் குறிக்கப் படுகிறது. இது பதிப்பிக்கப்பட்டுள்ளது. (கல்வெட்டு இதழ் 2 ஜூலை 1974)

பின்னர், திருவரங்கத்தமுதனார் இயற்றிய 'இராமாநுசர் நூற்றந்தாதி' முத்திதரும் எதிராசர் பொன்னடிக்க மொழிந்த அமுதனார் பாடல் நூறு மட்டும் என்று ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளியபடி சிறந்த நூலாக அமைந்துள்ளது.

இதையடுத்து 12-ம் நூற்றாண்டில் தோன்றிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அருளிய அழகரந்தாதி, திருவேங்கடத் தந்தாதி, திருவரங்கத்தந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி இவைகள் சிறந்த சிற்றிலக்கிய நூல்களாகத் திகழ்கின்றன.

கம்பர் பாடிய சடகோபரந்தாதியும், சரஸ்வதியந்தாதியும் கலையுலகில் அன்பர் நெஞ்சத்தை ஈர்த்துக் களிப்பில் மூழ்கச் செய்யும்.

'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன் என்று தனிப் பாடல் சிறப்பித்திருப்பினும், ஒட்டக்கூத்தர் பாடிய அந்தாதி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பரஞ்சோதி முனிவர் பாடிய மதுரைப் பதிற்றுப் பத்தாந்தாதியின் சிறப்பு வரையறுக்க ஒண்ணாதது. குட்டித் திருவாசகம் என்று போற்றப்படும் திருக்குருவை வெண்பா, நலித்துறை பதிற்றுப்பந்தந்தாதி நூல்கள் சுவையான பாடல்களால் ஆக்கப்பட்டவை. இவ்வாறு ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல அந்தாதி இலக்கியங்களை நாம் காண்கிறோம். பெண்பாற்றெய்வங்கள் மேல் பாடப்பட்ட அந்தாதி நூல்களுள் அபிராமி அந்தாதி, தில்லைச் சிவகாமி அந்தாதி இரண்டும், மற்றைய அந்தாதி நூல்களினின்றும் மிக்க சிறப்புடையவை. திரிகூடராசப்ப கவிராயரால் இயற்றப்பட்ட யமக அந்தாதியும், குற்றால வெண்பா அந்தாதியும் இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை. மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் 11 அந்தாதி நூல்களைப் பாடி அந்தாதி இலக்கியத்தை மேலும் விரிவடையச் செய்துள்ளார்.

ஆசிரியர்கள் மீதும் அந்தாதி நூல்கள் பிற்காலத்தில் எழுந்தன. சடகோபர் அந்தாதி, ராமாநுச நூற்றந்தாதியைப் போலவே சைவ குருமார்கள் மீதும் ஆரூர் மெய்த்தேசிகர் மேல் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கர முனிவர் அந்தாதி, மீனாக்ஷி சுந்தர தேசிகர் அந்தாதி என்னும் அந்தாதிகள் உள்ளன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பேரில் வித்துவான் தியாகராச செட்டியார் இயற்றிய அந்தாதி ஒன்று 92 பாடல்களுடன் அச்சாகமல் டாக்டர் ஐயர் அவர்கள் நூல்நிலையத்தில் இருக்கின்றது.

திருக்குறட்பாக்களில் பலவற்றை மக்கள் மனப்பாடமாக்கிக் கொள்வதற்கு உதவியாக அந்தாதித் தொடையால் அமைத்துக் காட்டுவது திருக்குறள் அந்தாதியாகும்.

இந்நூல் சைனிகமித்திரன் பத்திராதிபர் இராசிபுரம் ஆர்.கே அரங்கசாமி அவர்களால் தொகுக்கப் பெற்றது (1946)

முன்னர் வெண்பா, கலித்துறை பதிற்றுப்பத்து அந்தாதி என்ற யாப்பு நெறியில் அமைந்த அந்தாதி நூல்களைப்பார்த்தோம். விருத்த யாப்பிலும் அந்தாதி எழுந்துள்ளன. உரும்பைச் சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம் என்ற நூல் வாகீச கலாநிதி ஸ்ரீ கி.வா. ஜகந்நாதையர் அவர்கள் இருசீர் அந்தாதி, முச்சீர் அந்தாதி, நாற்சீர் அந்தாதி என்று நூறு பாடல்களாக இம்மூன்று அந்தாதிகளையும் ஆக்கியுள்ளார் (1966)

பதிற்றுப்பத்தந்தாதி போல, பதிற்று நூற்றந்தாதி என்பதும் ஒவ்வொரு வகைவிருத்தத்திலும் நூறு பாடல்களாக ஆயிரம் பாடல்களில் திருப்பெருந்துறை இறைவன் பேரில் ஆன்மநாதன் பதிற்று நூற்றந்தாதி என்ற நூலை கவிராச பண்டிதர் நா. கனக ராசய்யர் அவர்கள் இயற்றியுள்ளார். இந்நூல் கையெழுத்துப் பிரதியாக ஓரியண்டல் கையெழுத்துப் பிரதி நூல் நிலையத்தில் 8242 என்ற எண்ணில் உள்ளது.

மேற்சொன்ன அந்தாதிகள் அந்தாதி இலக்கிய வகையில் புதுமைப் படைப்புக்களாகும். சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் 'உலகெலாம்' எனத் தொடங்கி 'உலகெலாம்' என்றே முடிந்துள்ளதை எண்ணிப் பார்த்தால் ஒரு பெரிய நூலையே அந்தாதியாக்கியது வியப்புக்குரியதாகும்.

சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் ஆற்றுவரியாக உள்ள பாடல்களில் அந்தாதி மணம் வீசக் காணலாம்.

அரசர்கள் பேரிலேயோ, தங்களை ஆதரித்த வள்ளல்கள் பேரிலேயோ அந்தாதி நூல்கள் எழுந்ததாகத் தெரியவில்லை.

இதுவரை தெரியவந்த அந்தாதி நூல்களின் பட்டியல் இந்நூலின் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏட்டுச் சுவடியிலும் கையெழுத்துப் பிரதியிலும் தங்கி அச்சிடப்படாத அந்தாதிகளை உடுக்குறி கொடுத்துக் காட்டியுள்ளோம்.

இப்போது அறிமுகத்துக்கென்று எடுத்துக் கொண்ட நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி முன் சொன்ன பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் 108 திருப்பதி அந்தாதியை அடியொற்றிய தாக உள்ளது. ஆயினும் 103 திருப்பதிகளைப் பற்றிக் கூறும் இதர நூல்களினின்றும் இது வேறுபட்டதாக நிற்கின்றது.

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

நூலாராய்ச்சி

நூற்றெட்டுத் திருப்பதிகளைப் பற்றிய செய்திகள்;

சேர சோழ பாண்டிய நாடு முதலிய பழைய நாட்டுப் பிரிவினை இப்போதில்லாவிடினும், பழைய மரபுப்படி நாட்டுக் கிரமப்படி வைஷ்ணவ திருப்பதிகள் எவ்வளவு என்பதைப் பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதிச் செய்யுள் ஒன்று அறிவிக்கிறது.

ஈரிருபதாம் சோழம்[40] ஈரொன்பதாம் பாண்டி[18]
ஓர் பதின்மூன்றும் மலைநாடு[13] ஓரிரண்டாம் - சீர் நாடு[2]
ஆறோடு ஈரெட்டு தொண்டை[22], அவ்வடநாடு ஆறிரண்டு[12]
கூறு திருநாடு ஒன்றுக் கொள்.

மேலுள்ள அட்டவணையின்படி சோழநாட்டுத் தலங்கள் 40, பாண்டிய நாட்டுத் தலங்கள் 18, மலைநாட்டில் 13, நடுநாட்டில் 2, தொண்டை நாட்டில் 22, வடநாட்டுத் தலங்கள் 12, திருநாடு ஒன்று ஆக திருப்பதிகள் 108. இவற்றின் உட்பிரிவை நோக்குவோம். கடற்கரைத் தலங்கள் 7, கட்டு மலையில் 6, சின்ன காஞ்சிபுரத்தில் 5, பெரிய காஞ்சி புரத்தில் 9, காவிரிக் கரையில் 12, திருத்தலங் களுக்குளுள்ளவை 12, மலைமேலும் சரிவிலும் உள்ளவை 13 வடகலைத்திருமண் காப்புள்ளவை 13, ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார் திருநகரியைச் சுற்றியுள்ள தலங்கள் 8.

சந்நிதி :–

		இந்த நூலில்
திருமுகமண்டலம் வடக்கு நோக்கிய தலங்கள்	3	5
தெற்கு நோக்கியவை	7	8
மேற்கு நோக்கியவை	19	17
கிழக்கு நோக்கியவை மற்ற	79	78
	108	108

திருக்கோலம்:

	தவழ்ந்த	1
சயன திருக்கோலத்தலங்கள்	27	29
வீற்றிருந்த திருக்கோலத்தலங்கள்	21	19
நின்ற திருக்கோலப்பதிகள் மற்ற	60	58
	108	107

சயனத் திருக்கோலத்துள் எட்டு வகையுண்டு

1.	உத்தியோக சயனம்	1
2.	தர்ப்பசயனம்	1
3.	தலசயனம்	1
4.	புஜங்க சயனம்	20
5.	போக சயனம்	1
6.	மாணிக்க சயனம்	1
7.	வடபத்ரசயனம்	1
8.	வீர சயனம்	1

ஆக சயனம் வகை எட்டுக்குத் தலங்கள் 27

ஆழ்வார்கள் பதின்மர், ஆண்டாள் ஆகிய பதினொருவரும் மங்களாசாஸனம் செய்துள்ள தலம் திருவரங்கம்.

இப்பதினொருவருள் தொண்டரடிப்பொடியாழ்வார் தவிர மற்றவர்கள் பாடிய தலம் திருவேங்கடம், திருபாற்கடல்.

எண்மர் மங்களாசாஸனமுள்ளது பரமபதம்	
எழுவர் பாடியருளிய திருப்பதி திருக்குடந்தை	
அறுவர் அருளிய தலம் திருமாலிருஞ்சோலை	
ஐவர் மங்களசாஸனமுடையவை 6 தலங்கள்	
நான்கு ஆழ்வார்களால் பாடப்பெற்ற தலம்	3
இருவர் மங்களாசாஸனம் பெற்றவை	5
மூன்று ஆழ்வார்களின் பாடல் பெற்றவை	5
இருவர் மங்களாசாஸனம் செய்தது	21
ஒருவர் பாடல் மட்டும் பெற்றவை	67
	108

11. ஆழ்வார்களால் பாடப்பெற்ற தலங்களின் விவரம்:-

திருப்பாணாழ்வார் 3, தொண்டரடிப் பொடியாழ்வார் 4, பொய்கையாழ்வார் 6, குலசேகராழ்வார் 8, ஆண்டாள் 11, பூதத்தாழ்வார் 13, பேயாழ்வார் 15, திருமழிசையாழ்வார் 17, பெரியாழ்வார் 19, நம்மாழ்வார் 36, திருமங்கையாழ்வார் 86, மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளைப் பற்றிப் பாடிய அந்தாதித் தொடையால் அமைந்த நூல் என்பது இதன் பொருள்.

திருப்பதி என்பது திருமால் அர்ச்சாவதார ரூபியாய் எழுந்தருளியிருக்கும் திவ்விய தலம்.

பன்னிரு ஆழ்வார்களைத் தொடர்ந்த நாதமுனிகள் காலத்திலேயே வைணவ திருப்பதிகள் 108 என்பது அறுதியிடப் பட்டது. இவைகளன்றி முனிவர் முதலியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஏற்றம் பெற்ற புராண ஸ்தலங்களும், ஆழ்வார் ஆசாரியர்களின் திருவவதாரம் முதலிய சம்பந்தங்களினால் ஏற்றம் பெற்ற தலங்களும் உண்டு.

1. திருநாராயணபுரம் அல்லது மேல் கோட்டை என்பது மேல் நாட்டில் (தற்போதைய கர்நாடக நாட்டில்) உள்ளது. இது செல்வப்பிள்ளை எழுந்தருளிய தலம்.

2. ராஜமன்னார் கோயில் இராசகோபாலன் எழுந்தருளிய தலம்.

3. ஜநார்த்தநம். இது மேலைக்கடற்கரையில் உள்ளது. ஜநார்த்தனப் பெருமாள் எழுந்தருளிய தலம். இவர் கையில் கொண்டுள்ள நீரை யுக முடிவில் ஆசமனம் செய்வர் என்பர்.

4. ஸ்ரீமுஷ்ணம்:- சோழ நாட்டில் உள்ளது. ஆதி வராகப் பெருமாள் எழுந்தருளிய தலம்.

5. புஷ்கரம்:- தீர்த்த ரூபமாக எம்பெருமான் எழுந்தருளி யுள்ள தலம் இது. வட நாட்டில் ராஜஸ்தானத்தில் அஜ்மீரை அடுத்துள்ளது.

6. ஜகந்நாதம்:- ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்தருளிய தலம். புருஷோத் தமம் என்னும் மறு பெயருடையது. ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ளது.

7. ஸ்ரீகூர்மம்:- ஸ்ரீவராகப் பெருமாள் எழுந்தருளியுள்ள தலம்.

8. சிங்கப்பெருமாள் கோயில்:- இது தொண்டை நாட்டில் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ளது. நரசிங்கமூர்த்தி எழுந்தருளிய தலம்.

9. அவந்தி:- கண்ணன் எழுந்தருளியுள்ள தலம். உஜ்ஜயினி என்னும் மறுபெயருடையது.

10. கயா:- வடநாட்டில் உத்திரப் பிரதேசத்தில் பங்குனி நதிக் கரையிலுள்ளது. சிராத்தபிண்டம் போகும்படியான விஷ்ணு பாதம் உடையது.

11. பிரயாகை:- வடநாட்டில் உத்திரப்பிரதேசத்தில் உள்ளது. மாதவப் பெருமாள் ஆலிலையில் பள்ளி கொண்டுள்ள தலம் அலஹாபாத் எனப்படுவது.

12. மயிலாப்பூர்:- இது முதலாழ்வார்கள் மூவரில் பேயாழ்வார் திருவவதரித்த தலம்.

13. திருமழிசை:- திருமழிசை ஆழ்வார் அவதரித்த தலம்.

14. திருவஞ்சிக்களம்:- குலசேகராழ்வார் அவதரித்த தலம். மலை நாட்டில் உள்ளது.

15. திருமண்டங்குடி:- தொண்டரடிப் பொடியாழ்வார் பிறந்த தலம்

16. திருக்குறையலூர்:- திருமங்கையாழ்வார் அவதரித்த தலம்

17. காட்டுமன்னார் கோயில்:- ஸ்ரீமந் நாத முனிகளும், ஸ்ரீ ஆளவந்தாரும் அவதரித்த தலம். தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ளது.

18. பூவிருந்தவல்லி:- திருக்கச்சி நம்பிகள் பிறந்த ஊர்.

19. ஸ்ரீபெரும்புதூர்:- இராமாநுசர் அவதரித்த தலம். இவருக்குப் பெரிய நம்பிகள் த்வயம் உபதேசித்த தலம் மதுராந்தகம்.

20. கூரம்;- கூரத்தாழ்வார் அவதரித்த தலம்.

21. மழலை மங்கலம்:- எம்பார் அவதரித்த ஊர்.

22. பச்சைப்பெருமாள் கோயில்:- முதலியாண்டான் பிறந்த தலம்.

பிள்ளைப் பெருமாள் ஐய்யங்கார் அருளிய நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியின் அடியொற்றிப் பின்னர் பல நூல்கள் எழுந்தன.

1. நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா:-

இதன் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. அழகிய மணவாளதாசர் என்னும் பிள்ளைப்பெருமாள் ஐய்ங்காரால் பாடப் பெற்ற நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் கூறப்பட்ட திருப்பதிகளின் எண்ணிக்கையிலிருந்து, இந்நூலில் சொல்லிய கணக்கு வேறுபடுகின்றது. இந்நூலில் வரும் செய்யுளில்.

சோழநாட்டிருப்பான்[20] சொற்பாண்டியிரொன்பான்[18]
பாழிமலை நாட்டுப்பன்மூன்றும்[13] - வாழ்தொண்டை
நாட்டிருப்பான் மூன்று[23] வடநாட்டாறிரண்டு[12] கடல்[1]
வீட்டொடு1 நூற்றெண்பதியாமே.

இவ்வெண்பாவில் கூறப்பெற்றுள்ளவண்ணம் நோக்கின் சோழ நாட்டுள் 20, பாண்டி மண்டலத்தில் 18, மலைநாட்டில் 13, தொண்டைநாட்டில் 23, வடநாட்டுள் 12, திருப்பாற்கடல் 1, பரமபதம் 1 ஆக 88 தலங்களே குறிக்கப்பட்டன. "சோழ நாட் டீரிருபான்" எனப் பாடங்கொண்டால் 108 தலங்கட்கும் விவரம் கிடைக்கும். மூலப்பிரதியில் சோழநாட்டிரு (ப்) பான் என்றே எழுதப் பெற்றுள்ளது. நாலுள் சோணாட்டு 40 பதிகளுக்கும் பாடல் இருப்பதால் சோணாட்டீரிருபான் எனவே கொள்ள வேண்டும்.

இந்நூல் வெண்பாக்கள் எளிய இனிய நடையில் உள்ளன. இந்நூலாசிரியர் குருகை இளைய பெருமாள் என்பவரின் மாணக்கர் என்றும், அன்னார் சொற்படி இந்நூலை இயற்றினார் எனவும் ஒரு பாடலால் உணரலாம்.

2. நூற்றெட்டுத் திருப்பதி அகவல்:-

இது இராமநாதபுரம் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் என்கிற அனந்தாசவார் அருளியது. 1908 - இல் அச்சானது. திருமால் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிறந்த தலங்களென ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் காணப்படுகின்ற 108 திவ்ய தேசங்களின் திருநாமத்தையும், புராண ஸ்தலங்கள் என்று பிரசித்தமான ஆறு திருப்பதிகளின் பெயரையும் பெரும்பாலும் அடைமொழியில்லாதபடி அடுக்கி, 51 அடிகள் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் அமைத்தது இப்பிரபந்தம்.

திவ்விய தேசங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு கூறிய திருப்பதிக் கோவையாக அமைந்த இவ்வகவலை வைணவர்கள் பாராயணம் செய்து வருகின்றனர்: இந்த நூலின் ஆசிரியர் ஸ்ரீ முத்துசாமி ஐயங்கார் - ஸ்ரீ மு. இராகவையங்காருடைய தந்தையாராவர்.

108 திருப்பதிக் கோவை:-

இதை ஆக்கியவர் ந. சுப்பராயப் பிள்ளை (1942)

திருமால் கோயில் கொண்டுள்ள திருப்பதிகளின் பெயர்களையும் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் பெயர்களையும் ஒருங்கு ஓதுவதற்கேற்றவாறு, அமைந்த நூல் 108 திருப்பதிக் கோவை. நூல் முழுவதும் ஒரு கோவையாகத் தொடர்ந்து செல்லும் கலிவெண்பாவால் இயற்றப் பெற்றுள்ளமையால் ஓதுவார்க்கு எளிதாக உள்ளது. 108 திருப்பதிகளுடன், பெருமாள் திருக்கோவில் திருநாராயணபுரம், ராஜமன்னார் கோயில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் இவைகளைத் தினமும் ஓதுவாரும், ஓதக் கேட்டிருப்பாரும் நான் வணங்கத் தக்கவர்கள் என்று நூற் பயனும் கூறி 115 கண்ணிகளுடன் நூலை முடிக்கிறார்.

4. 108 திருப்பதிப் பாடல்கள்:-

இது சேது சமஸ்தான மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் இயற்றியது. 1946 செந்தமிழ் நவம்பர் இதழில் வெளி வந்தது.

இந்நூற்றெட்டுத் திருப்பதிப் பாடல்கள் இன்ன இன்ன நாட்டுள் இத்தனையத்தனை திருப்பதிகள் உளவென்று அவற்றின் பெயர்களை அழகுறத் தொகுத்து விளக்குவன. சந்த அமைதியுடைய இச்செய்யுட்கள் திருமால் திருப்பதிகளை அடிக்கடி நினைவு கூர்வாருக்கும், அறிய விரும்புவோர்க்கும் நன்கு பயன்படும். இந்நூல் எட்டு செய்யுள்களால் ஆனது. இறுதியில் வரும் வெண்பா நூற் பயனைக் கூறுகிறது.

5. 108 திருப்பதிப் போற்றி அகவல்:-

இது திப்பத்தூர் கா. அ. ஷண்முக முதலியார் அவர்கள் ஆக்கியது. 1963ல் பதிப்பிக்கப்பட்டது.

நாரணர் எழுந்தருளும் ஏற்றமார் நற்பதிகள் 108ஐயும் தரிசிக்கும் நற்பேற்றை நல்கவல்லது '108 திருப்பதி அகவல்

இப்பேற்றைக் கவி வடிவமாகத் தந்துள்ளனர் திரு. ஷண்முக் முதலியார் அவர்கள்.

நூற்றெட்டுத் திருப்பதி விளக்கம் என்னும் பகுதியும் இவ்வகவலோடு இணைந்துள்ளது. இது சுருக்கமும் தெளிவும் அமையத் தொகுக்கப்பட்டது. ஆழ்வார்களின் மங்களா சாசனப் பாசுரங்கள் ஆய்ந்து தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருப்பதியைப் பற்றியும் அங்குள்ள பெருமாளின் பெயர், பிரட்டியார், 'இது எங்குள்ளது என்னும் மூன்று செய்திகளையும் தருகிறது.

6. 108 திருப்பதித் தாலாட்டு:-

இது உபயகவி அப்பா என்பவர் இயற்றியது. ஆழ்வார் திருநகரிப்பதிப்பு 1967.

அடைமொழிகள் ஏதுமின்றி 108 திருப்பதிகளையும் நம்மாழ் வார் வாழ்த்தும் 47 கண்ணிகளாக அமைந்துள்ள சிறு நூல் இது.

"உபயகவி அப்பா உரைக்கும் இந்தத் தாலாட்டால்
உபயலோ கத்தில் உள்ளோர் உகந்து ஊழி வாழியவே"

என்பது இதில் வரும் ஒரு கண்ணி; இந்நூலுடன் சுவாமி நம்மாழ்வார் தாலாட்டு என்ற சிறு நூலும் இணைந்துள்ளது.

7. 108 திருப்பதித் திருப்புகழ்:-

இதன் ஆசிரியர் பிரபந்த வித்துவான் குரவை இராமானுச தாசர். 1970ல் வெளிவந்தது.

108 திருப்பதிகளைச் சென்று தரிசிக்கும் சக்தியும் வாய்ப்பும் இல்லாதவர்கள், அப்படிச் சென்று வணங்கி வழிபட்டவர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லக் கேட்டு மகிழ்கிறார்கள். இவ்வாசிரியர் வெகு நூதன முறையில் 108 திருப்பதிகளின் தனிப்புகழைத் 'திருப்புகழ்' என்று தலைப்பிட்டு, அருணகிரியார் வகுத்துக் காட்டிய வழியில் வண்ணச் சந்த வடிவில் இயலும் இசையும் சேரப் பாடியுள்ளார். சிற்சில பாடல்களில் ஆழ்வார் கள் பாசுரங்களின் எதிரொலி கேட்கிறது.

8. 108 திருப்பதி வண்ண விருத்தம்:-

இது திருமால் எழுந்தருளியுள்ள திருப்பதிகளைக் குறித்துப் பாடப் பெற்றுள்ளது. இயற்றியவர் பெயர் முதலியன தெரிந்த தில்லை. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது. ஏட்டுப் பிரதியும்

கையெழுத்துப் பிரதியும் ஐயரவர்கள் நூல் நிலையத்தில் உள்ளது. இந்நூலும் நம்மாழ்வார் பேரில் ஒரு காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறது.

மேற்சொன்ன ஒவ்வொரு நூலும் தனிச் சிறப்புடையது ஆயினும், இவற்றிற்கெல்லாம் மூலநூலாகத் திகழ்கின்றது பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அருளிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி. இது அவர் இயற்றிய அட்டப் பிரபந்தம் என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு திருப்பதியின் தனிச் சிறப்பையும் அதில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் நம்மைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றி முத்தி உலகளிப்பான் என்பதையும் அந்தப் பாடல்கள் கூறுகின்றன.

நாம் ஆய்வுக்கெடுத்துக் கொண்டுள்ள 108 திருப்பதி அந்தாதி என்னும் நூல் மேற்சொன்ன எல்லா நூல்களினின்றும் வேறுபட்டது. இதுவரை நாம் பார்த்த ஒரு நூலாவது இந்நூலில் வரும் செய்திகள் தரப்படவில்லை. இவ்வாசிரியர் தமக்கென ஒரு வரையறையை வகுத்துக் கொண்டு இந்திரப் பதிகளை தரிசனம் செய்பவர்களுக்குப் பேருதவியாய் இருக்கும் வண்ணம் எட்டு செய்திகளை வகைப்படுத்தித் தந்துள்ளார். இக்கருத்தோடு இவர் பாடியிருப்பதை எண்ணுகையில் இவர் திருப்பதிகளில் பெரும்பாலானவற்றை நேரில் சென்று தரிசித்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஒவ்வொரு பாடலிலும் ஒரு திருப்பதியைப் பற்றிய எட்டுச் செய்திகளைக் கூறுகிறார்: வழிபட்டோர், தீர்த்தம், விமானம், பிராட்டியின் பெயர், திரை, கோலம், திருமால் திருப்பதி என்பன அவை. வேறு எந்த நூலும் இவ்வெட்டுச் செய்திகளையும் ஒரு சேரத் திரட்டிக் கொடுக்க முற்படவில்லை.

108 திருப்பதிகள் என்று தலைப்புக் கொடுத்துள்ள போதிலும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்படாத, ஆனால் முனிவர் முதலியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஏற்றம் பெற்றுள்ள ஸ்தலமாகிய திருநாராயணபுரம் என்ற மேல் கோட்டையை 72-வது பாடலாகச் சேர்த்திருப்பதால் இவ்வாசிரியர் இராமாநுச பக்தர் என்பது நன்கு புலப்படுகிறது. இராமாநுசர் தான் செல்வப்பிள்ளை எழுந்தருளிய ஸ்தலமாகிய திருநாராயணபுரத்தில் சந்நிதி முதலியன நிர்மாணம் செய்து செல்வப் பிள்ளையை எழுந்தருளப்பண்ணி உத்ஸவாதிகள் நடக்க ஏற்பாடுகள்செய்தார். யாதலாத்திரி யதிசையம் என்ற மறுபெயர்களுடைய பிரசித்தமான தலம் இதுவே.

ஆசிரியர் :-

இந்நூலிலுள்ள இறுதிப்பாடலில் திருகின்றவூர் திருமலை அத்தங்கிதாதாரியர் தொண்டன் செப்பியது என்று கூறியிருப்பதால் இவர் ஊரும் பெயரும் தெரிய வருகிறது.

இவர் வாழ்ந்த காலம் அல்லது இயற்றிய வேறு நூல்களைப் பற்றிய விவரம் யாதும் தெரியவில்லை.

108 திருப்பதிகளையும் ஆழ்வார் ஆசாரியர்களின் பலரோ ஒருவரோ நேரில் சென்று பார்த்து அத்தலத்துப் பெருமானை வணங்கி வந்த பிறகு அத்தலத்துக்குரிய பாடலை அவர்கள் செய்தார்கள் என்று நாம் கொள்ள வேண்டியதில்லை. உதாரணமாக, சாலிக்கிராமம் என்னும் திருப்பதி இமயமலைச் சாரலில் நேப்பாளராச்சியத்தின் தலைநகரமாகிய காட்மாண்டுவிலிருந்து 80 மைல் தொலைவில் அடர்ந்த காட்டினிடையே உள்ளது. இத் திருப்பதியைப் பற்றிப் பாடிய பாடல்கள் எல்லாம் நேரில் சென்று தரிசித்துத் தான் ஆழ்வார்களும் ஆசிரியர்களும் பாடினார்கள் என்று எண்ண வேண்டியதில்லை. இத்தலத்திலுள்ள மூர்த்தி பிராட்டியார் இவர்கள் பெயர்களைக் கொண்டே பாடல்களை யாத்திருக்கக் கூடும். மேலும் திருப்பாற் கடல் என்னும் திருப்பதி நிலவுலகில் இல்லை, மலையுலகிலும் இல்லை, இது வட அருவத்தில் உள்ளதென்பது சில அறிஞர் கருத்து. அடியார்களின் கற்பனையுலகில் உள்ளது. அவர்கள் ஞானக் கண்ணால் கண்டு மனக்கமல மலரில் இருத்திப் போற்றி, மகிழ்ந்து இன்புறும் மூர்த்தி, பிராட்டி இங்குள்ளனர்.

திருநாடு, திருப்பரமபதம் என்னும் வைகுண்டமும் இத்தகையதே. இதுவும் பரமபத நாதன், திருமகள், நீலமகள், நீளாதேவி என்ற பிராட்டியாருடனும் தன்னைவிட்டு நீங்காத நித்திய சூரிகளும் திருமாமணி மண்டபத்தில் பொற்றவிசில் எழுந்தருளி ஆள் செய்வதாய் ஞானக் கண்ணால் கண்டு சான்றோர்கள் வழிபட்ட திருப்பதி.

ஆக, நிலவுலகிலும் மலையுலகிலும் உள்ள 106 திருப்பதிகளோடு, கற்பனை உலகில் இரண்டு பதிகளுடன் 108 திருப்பதிகளும் ஒவ்வொருவரும் சென்று வணங்கி மகிழத்தக்க தலமாக அமைந்துள்ளன. ஒரோரு இடத்தில் நதிக் கிராமத்தைப் பற்றிய பாடலையும் காண்கிறோம்.

இந்நூலுள் ஒவ்வொரு திருப்பதியைப் பற்றியும் மிக அவசியமான எட்டுச் செய்திகளையும் கொடுக்கத் திட்டமிட்டு

இந்நூலை ஆக்கியுள்ளார். இச்செய்யுட்களில் இலக்கிய நயமோ, சாதுர்யமாகச் சொல்லும் முறையோ நாம் காண இயலவில்லை.

செய்யுட்களில் கையாளப்படும் பல சொற்களால் ஆசிரியர், தமிழ் நூல்களிலும், முக்கியமாக பாகவத நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியுள்ளவர் எனத் தெரிகிறது. இவருடைய சமகாலப் புலவர்களையோ, இதரச் செய்திகளையோ இந்நூலில் நாம் காணயியலவில்லை.

பொதுவாக, இதுவரை 108 திருப்பதிகளைப் பற்றி எழுந்த நூல்களினின்றும் அறியப்படாத செய்திகள் - எட்டுச் செய்திகள் இந்நூலில் நன்கு தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இது வரை அச்சாகாத நூல்களுள் இது ஒன்று.

108 திருப்பதிகள் அகரவரிசைப்படுத்தி அவைகளில் சொல்லப்பட்டிருக்கும் எட்டுச் செய்திகளையும் தொகுத்து பிற் சேர்க்கையாகக் கொடுத்துள்ளோம்.

பிற நூல்களில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் சில இந்நூலில் வேறு விதமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் இது ஒரு முழுமையான, பயனுள்ள நூல் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையத்தின் சார்பில் முகவுரை, நூலாராய்ச்சியுடன் குறிப்புரையும் எழுதியுள்ளேன்.

திருவான்மியூர்
25-8-79

(எஸ். ஸ்ரீநிவாசன்)

நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி

காப்பு.

குருகைப்பிரான்.

பேறுபெற் றோர்புட் கரணிவிமானம் பிராட்டிதிசை
வீறுயர் கோலந் திருமால் திருப்பதி மிக்கதொரு
நூறுட னெட்டு முறையே யிசைக்க நுவல்பொருநல்
ஆறுடை யான்குரு கூருடை யான்பொன் னடியரணே (1)

பரகாலன்.

பரகாலன் பாசக் கயத்தார்ப் புணுகருள் பாரெனவும்
பரகால னுந்திரு மாலவ னெங்கட் படாமையினிம்
பரகால னன்றி யவர்க்குரித் தாமுனைப்பற்றி னஞ்சீர்ப்
பரகால னுன்மறை யாறங்க மோதுமெய்ப் பாவலனே. (2)

குறிப்புரை

1 கவி, நம்மாழ்வாரைப் பற்றிக் கூறிய காப்புச் செய்யுள் இது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலும் ஒரு திருப்பதியைப் பற்றிய எட்டுச் செய்திகளைக் கூறுகிறார். 1. வழிபட்டோர், 2. தீர்த்தம், 3. விமானம், 4. பிராட்டியின் பெயர், 5. திசை, 6. கோலம், 7. திருமால், 8. திருப்பதி என்பன அவை.

பொருநல் ஆறு உடையான்-தாமிரபரணி நதிக் கரையில் (திருக்குருகூரில்) அவதரித்தவர். அரண்-காப்பு, பேறு-பெறுதற்குரியது புருஷார்த்தம் அல்லது உறுதிப் பொருள். 'முறையே இசைக்க' என்றதனால், தனக்குமுன் போந்த அட்டப்பிரபந்த நூலாசிரியரான பிள்ளைப் பெருமாளையங்கார் என்னும் அழகிய மணவாள தாசரால் இயற்றப்பட்ட 'நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி'யில் சொன்ன முறையை அடியொற்றி எனக் கொள்ளலாம்.

திரு ஆழ்வார்கள் பன்னிருவர்களுள் நம்மாழ்வார் ஸ்ரீவைணவர்களுக்குப் பிரதம ஆசாரியர்ஆவர். இவர் பகவானது அம்சமும், ஸ்ரீகௌஸ்துபத்தினது அம்சமும் சேனை முதலியாரது அம்சமும் ஆவர். ஆகவே கவி இவருக்கு முதற்கண் காப்புச்செய்யுள் கூறினர். வைணவப் பிரபந்தகர்த்தாக்கள் நம்மாழ்வார்க்குக் காப்புச் சொல்லுவது மரபு.

2. இது திருமங்கையாழ்வாரைப் பற்றிய துதியாகும். பரகாலன்-யமன். ஆர்ப்புணுது அருள்பார்- (பாசக்கயிற்றால்) கட்டுப்

எதிராசர்.

எதிரா சனன மரணங்க ளென்பதி னிப்புவியில்
எதிரா சனக சனந்தன ஞதி யெவர்கருமெய்
எதிரா சனங்கனுய் வானிங்கெழு பத்துநால்வர்க்கருள்
எதிராசன் பொன்னடி யாரடி யாரடி யெய்தினர்க்கே. (3)

நூற் பயன்.

பரமபதந் திருபாற் கடல்பார்க் கரன்பற்றுமன்பர்
அரவனந் தாங்கமட் டாங்க நடுவிதையத் தினித்த
சுரர்பரவத் தெற்கிருந்து துயின்று நின்றுடுங் செய்யாள்
வரதனந் தாட்கொண் டதினூற்றெட் டோத வருங்கதியே. (4)

படாமல் இருக்க அருள்வாய். அம்பர காலனும் திருமால்—திரு விக்கிரமாவதாரம் எடுத்தபொழுது விண்ணையளந்த பாதத்தை யுடைய திருமால். இம்பா அ காலன் அன்றி அவர்க்கு உரித்தாம் உன்னை—இவ்வுலகில் அக்காலனுக்கு உரித்தாகாமல் திருமாலுக்கே உரித்தான பரகாலனை உன்னைப் பற்றினம் என்றபடி. நான் மறை ஆறங்கம் ஓதும்-நம்மாழ்வார் அருளிச்செய்த, நான் மறைக் குச் சமமான திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களுக்கு, ஆறு அங்கங்கள் போல அமைந்த பெரிய திருமொழி. திருவெழுக்கூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற ஆறு நூல்களை அருளிச் செய்தவர் பரகாலன் என்ற திருமங்கை யாழ்வார். ஆகையால் இவரை நம்மாழ்வாருக்கு அடுத்தபடியாக வைத்துத் துதிபாடியுள்ளார்.

3 இப்புவியில் எதிரா சனன மரணங்கள்—(எதிராசனை இராமாநுசருடைய பொன்னடியைத் தியானிப்பவர்க்கு) இனி இப் புவியில் சனன மரணங்கள் எய்தாவாம். மெய் யெதிராசன் அங்க னுய்.—உண்மைத் துறவிகளுக்குத் தலைவனாகிய வடிவம் ஏற்று. இங்கு எழுபத்து நால்வர்க்கு அருள் எதிராசன்-பெருமை மிக்க எழுபத்து நான்கு சீடர்களுக்கு உபதேசம் செய்த என்றவாறு. எதிராசன்—எதிகட்குத் தலைவன். எதிகள் (துறவிகள்) யாவ ரினும் மேம்பட்டிருப்பவன். இராமாநுசருக்கு உடையவர், எதி ராசர், பாஷ்யகாரர், சடகோபன் பொன்னடி என்ற திருநாமங்கள் உண்டு. இப்பாசுரம் எதிராசர் துதியாக அமைந்துள்ளது.

4 ஸ்ரீவைகுண்டம், திருபாற்கடல், சூரிய மண்டலம், யோகி களின் உள்ளக் கமலம் என்னும் இவையனைத்தும் இனியவை என்று திருவுள்ளம் உவந்து திருமால் எழுந்தருளியிருக்கும் இடங் கள். பார்க்கரன்—பாஸ்கரன் உறையும் சூரியமண்டலம். செய்யாள் வரதன் அம்தாள் கொண்டு அதில்—திருவுடன் கூடிய மாலவனின் திருவடி தோய்ந்த இடங்கள் பலவற்றிலும். நூற்றெட்டுத் திருப்பதிகள் மட்டும் இங்கு ஓத முனைந்தேன் என்றவாறு.

---

* இராமாநுஜர் 74 சிம்மாசனாதிபதிகளை நியமித்தருளினார் என்பது அவர் வாழ்க்கை வரலாறு.

நூல்

திரு அரங்கம்.

சீதரனே ! யயன் வீடணன் றன்மன் சிவன்பரவித்
தீதல புன்னைச் சசிவாவி வேதசிருங்கந்திகழ்
ஓதரு மானத் தரங்கமின் னூடுதெற் கோர்ந்துதுயில்
மாதவ னேயரங் கத்தரங் கர்சொல் வரனருளே.

திருஉறையூர்.

அருட்குல சேரன்றெழுமா விவன்மன் முன்னர்ச் சித்துய்ந்த
பெருக்க மதாம் புட்கரணி நதியும் பிறங்குமணி
வருக்கங் கொள் சோபனமானத் தவ்வூர்வல்லி மன்வடக்காய்த்
திருப்பாணர் தோன்றுறையூர் நின்ற நம்பி யென்சிந்தையனே.
(2)

திருவரங்கம்:—*ஸ்ரீதரன்—மகாலட்சுமியை இதயத்தில் தரித்தவனை பகவான், இவரைத் துதித்துப் பேறு பெற்றவர்கள்-பிரமன், விபீஷணன், தர்மன், சிவன் என்போர். ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள கடவுளை முதலில் ஆராதித்தவன் பிரமன் என்பார் பிள்ளைப் பெருமாளையங்கார். வீடணன், இராவண யுத்தமான பிறகு இராமபிரான் அயோத்திக்கு மீண்டருளிப் பட்டாபிஷேகம் செய்து கொண்டு யாவருக்கும் விடைகொடுத்தனுப்பும் பொழுது தனது திருவாராதன மூர்த்தியும், குலதனமுமான திருவரங்கநாதனை பிஷணும்வானிடம் கொடுத்து ஆராதித்து வரும்படி அனுப்பினான். விபீஷணன் அவ்வமரர் பெருமானை அவ் விமானத்துடனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இலங்கை செல்லும் பொழுது இடையில் உபயகாவேரி மத்தியிலே பெருமாள் புடை பெயராது விமானத்துடன் நிலைநின்றருளினான். அவ்வாறு திருமால் திருவுள்ளமுவந்து தங்கிய இடமே ஸ்ரீரங்கம் எனப்படுவது. (தர்மன்—தர்ம்வர்மர்).*

புன்னை-தலவிருக்ஷம், சசிவாவி-சந்திர புஷ்கரணி, வேத சிருங்கம் திகழ் ஓதருமானம்—வேத சிருங்கம் என்கின்ற பிரண வாக்ருதி விமானம். அரங்கமின்—அரங்கநாயகி, ஸ்ரீரங்க நாச்சியார். சேவை சாதிக்கும் திக்கு தெற்கு; சயனத் திருக்கோல அமைப்பு எம்பெருமான் திருப் பெயர்-ரங்கநாதன். (ஆழ்வார்கள் பதின்ஒருவராலும் மங்களா சாசனம் செய்யப்பெற்றதும் மிகுதியான பாசுரங்களையுடையதும் இத்திருவரங்கம் ஒன்றே.)

2 *இப்பாசுரம் திருவுறையூர் (திருக்கோழியூர்) பற்றியது.*

திருத்தஞ்சை.

சிந்தை செய்தின்பம் பராசரன் மாற்கண்டன் றேர்ந்திரவி
விந்தை செய்தீர்த்தத்தன் வேதா லையவன் வியானத்தினில்
இந்து நுதற்செங் கமலையோடுதெற் கிருந்தருளும்
எந்தை நற்றஞ்சை யழகிய சங்கரை யெண் ணுநெஞ்சே. (3)

திருஅன்பில்.

எண்ணம் பலவென்கொல் வான்மீகர் மெய்த்தவ மெய்துமன்பு
வண்ணமெய்த் தீர்த்தம் படிந்துயர் கேத்தி மானத் தெழில்
நண் ணு மழகிய வல்லி யுடன்குண திக்கிற் றுயில்
அண்ணலை யன்பில் வடிவழ காவெனி லாங்கதியே. (4)

திருக்கரம்பை.

கதிபெறு வான்முன் கதம்பமுனிவன் கதம்பத்தரு
விதியப் பெயர்புனலாடி யுத்தியோக விமானந்தனிற்
துதிசெய் யொருவரந் தேவியொடுகிழக் கிற்றுயிலும்
நிதியக் கரம்பையி லுத்தம வென்பவர் நின்மலரே. (5)

பேறு பெற்றோர்-ரவி தர்மராசன் என்பான். குடமுருட்டி நதி புட்கரணி, பிறங்குமணி வருக்கம் கொள் சோபனமானம்-பிரகாசிக்கின்ற மணிகள் பொருந்திய சுல்யரண விமானம். அவ்லூர் வல்லி. பிராட்டி உறையூர் வல்லி-திசை வடக்கு; கோலம்-நின்ற திருக்கோலம். எம்பெருமான் பெயர்-நின்ற நம்பி. திருப்பாணாழ்வார் திருவவதாரஸ்தலம்.

3 இப்பாசுரம் திருத்தஞ்சை மாமணித்தலத்தைப் பற்றியது. பராசர முனிவரும், மார்க்கண்டேயரும் பேறு பெற்ற இடம். தீர்த்தம்-சூரிய புஷ்கரணி, விமானம்-வேத சுந்தர விமானம். இந்து நுதல் செங்கமலை-பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய செங்கமலவல்லி பிராட்டி. திசை-தெற்கு கோலம்-வீற்றிருந்த திருக்கோலம். எம்பெருமான்-நரசிம்மன்.

தஞ்சாசுரனைக் கொன்ற தலமாதல் பற்றி இதற்குத் தஞ்சையெனப் பெயருண்டாயிற்றென்பர்.

4 இது திருஅன்பில் என்னும் திருப்பதியைப் பற்றியது. இங்கு வால்மீகி முனிவருக்கு அருள்பாலித்தது. தீர்த்தம்-அன்பு வண்ண மெய்த்தீர்த்தம். தாரக விமானம். நாச்சியார்-அழகிய வல்லி; கிழக்கு நோக்கிய சன்னிதி, சயனத் திருக்கோலம்: இறைவன் பெயர் வடிவழகிய நம்பி.

இப்பாசுரம் திருக்கரம்பனூரைப் பற்றியது: கதிபெறு

திருவெள்ளறை.

நின்மலமாற் கண்ட யன்புவி மங்கை நிமிக்கருளும்,
மன்மேய் குசலவ தீர்த்தன் பதும விமானத்தொளிர்
பொன்மலர்ச் செல்வியுடன் கீழ்த் திசைநின்ற புண்டரீக
நன்மலர்க் கண்ணனை வெள்ளறையின்கண்டு நாடுமினே. (6)

திருப்புள்ளம் பூதங்குடி.

நாடிய சீதை மணாளன் னுயர்கழு நாதற் கருள்
நீடு கிருத தீரவாவியன் சோபன நேரிருப்பில்
ஏடல ராளொடு மண்டங் குடிகிழக் கேய்ந்துதுயில்
கூடும்வல் வில்லிரா மன்புள்ளம் பூதங் குடிக்கரசே. (7)

வன்–உயர்கதி பெறுவதற்காக. கதம்ப மகரிஷிக்குத் திருமால் அருள் புரிந்த தலமாதல் பற்றி இது கதம்பனூர் எனப் பெற்றது. கரம்பனூர்-கதம்பனூர் என்பதன் மரூஉ. இது உத்தமர் கோயில் என்று வழங்கப்படும். தலவிருஷம்-கதம்பத்தரு (இது தல விருட்சம் என்றும் சிலர் சொல்வர்) தீர்த்தம்–கதம்ப தீர்த்தம். உத்தி யோக விமானம். பிராட்டி–அழகிய தேவி. சன்னிதி கிழக்கு. கோலம்–சயனம்: நிதியக்கரம்பை-செல்வவளம் பொருந்திய கரம்பனூர். எம்பெருமான்-புருஷோத்தமன்.

6 இது திருவெள்ளறையைப் பற்றியது வெள்ளறை-வெண்மையான பாறைகளால் இயன்ற மலை. அறை–பாறை. ஸ்வேதாத்திரி எனப்படும். பேறு பெற்றோர்-மார்க்கண்டேயர். பூதேவி; நிமி,(சிபி)சக்கரவர்த்தி. தீர்த்தம்–குசலவதீர்த்தம் (இங்கு குச சக்ர, புஷ்கல பத்ம, வராஹ. மணிகர்ணிகா தீர்த்தங்கள் உள என்பர்) விமானம்–பதும விமானம்: பிராட்டி-பங்கயச் செல்வி. திசை–கிழக்கு கோலம்–நின்ற திருக்கோலம். பிரான்-(புண்டரீகாக்ஷன்) புண்டரிக நன்மலர்க் கண்ணன்.

7 இது திருப்புள்ளம் பூதங்குடி பற்றியது. ஜடாயு என்ற புள்ளிற்கு இராமபிரான் மோக்ஷம் கொடுத்த தலம் என்பது புள்ளம் பூதங்குடி என்பதன் பொருளாகலாம். உயரிய சீதை மணாளன் கழுநாதற்கு அருள் திருப்பதி. தீர்த்தம்-கிருத தீர்த்தம் அல்லது கிருத்ர தீர்த்தம். சோபன விமானம் நேரிருப்பு–விமானம். பிராட்டி-பொற்றாமரையாள். திசை கிழக்கு. கோலம்-சயனம். பிரான்–வல்லிராமன் என்ற வல்வில்லிராமன் (வல்வில்-கோதண்டம்).

திருப்பேர் நகர்.

அரைச னுபரிசர வசனிகொள் பராசரனும்
திரைசெறி யிந்திர நீராடி யிந்திரச்சின கரத்தில்
உரைசெய் கமலையுடன் மேற்றிசைக் கண்ணுறங் கரங்கன்
விரைசெய் பொழிற் திருப்பேரினுற்றூரதை மேவுநெஞ்சே. (8)

திருஆதனூர்.

மேவித் தொழும்புவி மங்கைக் கருண்முகில் வெங்கதிரோன்
வாவிப் புனலிடை மூழ்கிப் பிரணவ மானந்தனிற்
ஆறிற்றிவரங் கத்தான் கிழக்கிற் பொருந்தத்துயில்
ஆவிக்கமுதந் தொல் ஆதனூ ராண்டளப் பான்றன்னையே. (9)

திருஅழுந்தூர்.

தன்னைத் தனக்கிணை யாம்பிரக லாதன் றனக்கருள்வோன்
மன்னப் புனிதன்பெயர் நீர்க்கருடவி மானந்தனில்
மின்னிற் பொலிசெங் கமலையன் கீழ்த்திசை மேவிநின்றான்
உன்னிப்பன் றுமரு விப்பயன் தேரழுந் தூரப்பனே. (10)

---

8 இது திருப்பேர் நகர் திருப்பதியைப் பற்றியது. இது கோவிலடி என்று வழங்கப்பெறும். சோழ நாட்டில் கல்லணையி லிருந்து கிழக்கே 5 மைல் தொலைவில் காவிரியின் வடகரையில் உள்ளது. பேறு பெற்றவர்கள்-இந்திரனும் பராசரரும், தீர்த்தம்-இந்திர தீர்த்தம்; விமானம்–இந்திர விமானம்; பிராட்டியார்-கமல வல்லி: திசை–மேற்கு; கோலம்–சயனம்; எம்பெருமான் அரங்கன் என்னும் அப்பகுடத்தான்.

இத்தலம் பெரியாழ்வார், திருமங்கை மன்னன், திருமழிசை ஆழ்வார் நம்மாழ்வார் இவர்களால் பாடப்பட்டது. உபரிசரன்• ஆகாயசஞ்சாரிகள். உபரிசரஅரசனிகொள் அரசன்-ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகத்தை வாகனமாகக்கொண்ட அரசன் இந்திரன்.

9 இப்பாசுரம் திருஆதனூரைப் பற்றியது. சோழ நாட்டில் சுவாமி மலையை அடுத்துள்ளது. இவ்வூர் காமதேனுவுக்குப் பிரத்யக்ஷமான தலமாதல் பற்றி இதற்கு ஆதன் ஊர் எனப் பெயர் வந்தது என்பர். இங்குள்ள இறைவனைத் துதித்துப் பேறு பெற்றவர்–பூமாதேவி, காமதேனு; தீர்த்தம்-வெங்கதிரோன்வாவி. சூர்யபுஷ்கரணி; விமானம்-பிரணவ விமானம்: பிராட்டி–ஸ்ரீரங்க நாயகி: திசை-கிழக்கு: சயனதிருக்கோலம், பிரான்–ஆண்டு அளக்கும் ஐயன் (பூமியை ஆண்டு, பூமியைக் காலால் அளந்த ஐயன்).

(10) இது திருஅழுந்தூரைப் பற்றியது. இப்போது

திருச்சிறுபுலியூர்.

ஊரும் வியாக்கிர முனிகல் லியமுனிக் குண்மைதந்தோன்
வாரு மன்தப் புனலொடு நந்தன் வர்த்தகத்திற்
சேருந் திருமா மகளொடு தெற்கு வணன்புயங்கண்
ணூருஞ் சிறுபுலி யூரருண் மாகட லாஞ்சரணே. (11)

திருச்சேறையூர்.

சரண்புகுங் காவிரிக் கின்பந்தரு மெய்யன் சாரநதி
யரண்பெருஞ் சாரவி மானத்திற் சார வணங்கினொடு
நிரந்தரங் கீழ்த்திசை நின்றருளிர் சாரப் பிரான்மதலைப்
பரம்பர னைத்திருச் சேறையிற் கண்டு பணிந்துய்மினே. (12)

தேரழுந்தூர் எனக் கூறப்படுவது. சோழ நாட்டில் மாயூரத்தை அடுத்துள்ளது. பேறு பெற்றோர்-பிரகலாதன், அப்புனிதன் பெயர்-நீரி. பிரகலாத தீர்த்தம்-கருடவிமானம்; பிராட்டி செங்கமல வல்லி. பிரான்—ஆமருவியப்பன்; உபரிச்ரவசு என்னும் அரசன் தனது தபோ பலத்தால் விமானத்துடன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தன்மையுடையவன். ஒரு சமயம் தேவர்கட்கும் முனிவர் கட்கும் நேர்ந்த விவாதத்தில் பக்ஷபாதகமாக இவன் தீர்ப்புச் சொன்னமையால் முனிவர்களால் சபிக்கப்பட்டுப் பூமியில் விழுகையில் அவனது தேர் அழுந்தப் பெற்ற இடமாதல் பற்றி இதற்கு அழுந்தூர் என்று பெயர் வந்தது என்பர். சந்நிதி-கிழக்கு; சேர்லம்-நின்ற திருக்கோலம்.

திருமங்கையாழ்வார் பாசுரம் பெற்ற தலம் இது; இங்குள்ள திருமாலை 'அடியார்க்கு ஆஆ என்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னிநின்ற, தேவாதி தேவன்' என்று போற்றுகிறார் அவர். 'ஆ மருவி மேய்த்த அரங்கர்' என்பர் பிள்ளைப் பெருமாளையங்கார். இது கம்பநாட்டாழ்வார் அவதாரம் செய்த இடம். தேவாரப் பாடல் பெற்ற தலமுமாம்.

(11) இப்பாசுரம் திருச்சிறுபுலியூரைப் பற்றியது. இவ்வூர் சோழ நாட்டில் கொல்லுமாங்குடியை அடுத்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. பேறு பெற்றோர்-வியாக்கிரபாதர் என்ற புலிக்கால் முனிவரும், வியமுனி என்ற வியாச முனிவரும், தீர்த்தம்—அனந்த சர்ஸ்; விமானம்-நந்தவர்த்தன விமானம், பிராட்டி-திருமாமகள் நாச்சியார், திசை-தெற்கு, சயனத் திருக்கோலம், எம்பெருமான்-அருண்மாகடல். இத்தலம் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றது. புயம்கண்ஆரும்-புயத்தில் (கையில் தலையை வைத்துக்) கண் வளரும்.

(12) இத்தலம் திருச்சேறை என்பது. இத்தலத்தில் எம்

திருத்தலைச் சங்க நாண்மதியம்.

உய்ய நினைவுடை யீர்சந் திரன்பணிந் துய்ந்தவவன்
துய்ய பெயர்ப்புன லாடிச் சுடர்மணி மானத்தருள்
செய்யுந் தலைச்சங்க ஞயகி யான்குண திக்கினின்ற
வையன் தலைச்சங்க ணுண்மதி யத்தி னடைமின்களே. (13)

திருக்குடந்தை.

அடைத்தம் புலந்தவஞ் செய்யேம மாமுனி யன்றருளே
கிடைத்துய் யுமேமப் புனலோன் வைதிகக் கிழக்கிருப்பைப்
படைத்திடுங் கோமள வல்லியன் சாரங்க பாணிதுயில்
உடைத்தண் குடந்தையி லாரா வமுதனை உன்னுநெஞ்சே.
(14)

பெருமான், நாச்சியார், விமானம், தீர்த்தம் நிலம் என்ற ஐந்து சார முள்ள பொருள்கள் அமைந்திருத்தலால் இத்தலத்திற்கு 'திருச் சேறை' என்று திருநாமமாயிற்று. இது வடமொழியில் 'பஞ்ச சார க்ஷேத்திரம்' என வழங்கப்படும். இவ்வாறு சாரமுள்ள பொருள்களையுடைய இத்தலத்தில் காவேரி நதி தவஞ்செய்து கங்கா நதியைக் காட்டிலும் சிறப்புப் பெற்றனள் என்பர்.

இத்தலம் சோழ நாட்டில் கும்பகோணத்துக்கு ஏழு மைல் தொலைவில் உள்ளது. இங்குக் காவிரி நதி இவ்வூர் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றதென்பர். எம்பெருமான், சாரநாதன்; பிராட்டி-சாரநாயகி; சாரவிமானம், சாரபுஷ்கரணி, சார க்ஷேத் திரம் மூர்த்தி, தலம், தீர்த்தம், நாச்சியார் விமானத் திருபெயர்கள் ஸாரமானமையால் இது பஞ்சஸார க்ஷேத்ரம் எனப் பெற்றது. திசை-கிழக்கு, நின்ற திருக்கோலம், திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்றது.

(13) இப்பாடல் திருத்தலைச்சங்க நாண்மதியம் என்ற தலைச் சங்காட்டைப் பற்றியது இது சோழ நாட்டில் உள்ள ஆக்கூர் லிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. பேறு பெற்றோர்: சந்திரன்; தீர்த்தம்-சந்திர புஷ்கரணி; சந்திர விமானம், பிராட்டி-தலைச்சங்க நாச்சியார் (செங்கமலவல்லி) திசை-கிழக்கு; கோலம்-நின்ற திருக்கோலம், இறைவன் பெயர்-நாண்மதியப் பெருமாள் அல்லது வெண்சுடர்ப் பெருமாள் நாள்-சூரியன்; மதியம்-மதியான் னம்-நண்பகல் கதிரோன். திருமங்கை மன்னன் பாடல் பெற்ற தலம். சிறந்த முதலில் தோன்றிய பாஞ்ச சன்னியமென்ற சங்கத்தை ஏந்திய நாண்மதியப் பெருமானையுடைய தலமாதல் பற்றி இத்தலத்திற்குத் 'தலைச்சங்க நாண்மதியம்' என்று திருப் பெயர் அமைந்தது.

(14) திருக்குடந்தை என்ற கும்பகோணத்தைப் பற்றியது இப்பாடல். இது சோழநாட்டுத் தலம். இங்குப் பூசித்துப் பேறு பெற்றவர் ஹேம மகரிஷி என்பவர். ஐம்புலன் அடைத்துத்

திருக்கண்டியூர்.

நெஞ்சங் குளிர்ந்து அரவங்கைக் கபாலத்தை நீக்குமெழிற்
செஞ்சுங் கபாலப் புனலோன்றன் சந்திரச் சினகரத்தில்
எஞ்சிற் செழுஞ்செங் கமலை யுடன்கிழக் கேய்ந்திருந்தான்
உஞ்சரன் சாப மறுத்தான் றிருக்கண்டி யூர்முகிலே. (15)

திருவிண்ணகர்.

முகிலே யருளெனு மார்க்கண் டயன்பிரு குக்குமுன்னுள்
மகிழ்வோ டருளும் அகோராத் திரப்புனல் விட்டுவத்தின்
திகழ்வாய பூமக ளாரக் குணதிசை சேர்ந்துநின்றான்
புகழாரும் விண்ணக ரொப்பிலி யப்பனென் புந்தியனே(16)

தவம் செய் ஏமமாமுனி என இயைக்க. தீர்த்தம்-காவிரி நதி, ஏமம்—பொன் வைதிக விமானம்; பிராட்டி-கோமளவல்லி, எம் பெருமான்-சாரங்கபாணி; ஆராஅமுதன். கிழக்கு நோக்கிய சந்நிதி; சயனத் திருக்கோலம். இத்தலத்தைப் பாடியவர் பெரி யாழ்வார், ஆண்டாள், திருமழிசைப்பிரான், திருமங்கை மன்னன், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆவர். ஆக 51 பாசுரங்கள். இது மிகச் சிறந்த சிவத்தலமும் ஆகும்.

(15) இது திருக்கண்டியூர் திருப்பதியைப் பற்றியது. சோழ நாட்டில் தஞ்சாவூரிலிருந்து வடக்கே ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ருத்திரன் பூசித்துக் கபால நிவர்த்தி பெற்றார். தீர்த்தம்—கபால தீர்த்தம். சந்திர விமானம். எஞ்சில்-குறை வில்லாத, பிராட்டி—கமலவல்லி, நோக்கும்திசை-கிழக்கு; கோலம்-நின்ற கோலம், எம்பிரான் பெயர்-ஹர சாப விமோசனப் பெரு மாள். அல்லது அரன் சாபம் தீர்த்த பெருமாள் என்பது. அரன் உஞ்சு-அரன் உய்யும்படியாக. இது வடமொழியில் 'கண்டபுரம்' எனப்படும். இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் பாசுரம் ஒன்று உள்ளது. (இது சிவஸ்தலங்களில் பிரசித்தி பெற்ற ஸ்தலமும் ஆம். அஷ்ட வீரத் தலங்களில் ஒன்று; பிரமாவின் சிரஸைக் கொய்த ஸ்தலம். சம்பந்தர் அப்பரால் பாடப்பெற்றது.)

வரலாறு: பிரமனது தலையில் ஒன்றைக் கிள்ளியதனால் அக் கபாலம் சிவபிரானது கையை விடாது பற்றிக்கொண்டது. அதிலிருந்து விடுதலை பெற வேண்டி சிவன் அதில் இரந்து உண்டு திரிந்தான். இறுதியில் திருமாலிடம் ஐயம் ஏற்றபோது சாபம் நீங் கப்பெற்றான். கபாலமும் கையை விட்டு அகன்றது.

(16) இத்தலம் திருவிண்ணகர் எனப்படும் (விஷ்ணு நகர்-விண்ணகர், ஒப்பிலியப்பன் சந்நிதி என்றும் வழங்குவர்)

திருக்கண்ணபுரம்.

புந்தி மிகுந்துண் டகமுனி வன்கண்வன் போற்றுநித்திய
கந்தனன்னீர னுயர்உட் பலாவத கத்தினிடைச்
சுந்தர வப்புர வல்லியன் கீழ்த்திசை தோய்ந்துநின்ற
வெந்தை கணபுரஞ் சேர்சௌ ரிராயரை யேத்துநெஞ்சே. (17)

திருவயலாளி.

ஏற்றிப் பணிமின் கலியன ருந்தமிழ்க் கின்பமருள்
சாற்றலி லாக்கனி வாவி விமானமொண் சஞ்சனத்தின்
மேற்றிசை யங்கமு திற்பிறந் தாளொடும் வீற்றிருந்தங்கு
ஆற்ற லருண்மண வாளனே கன்வய லாலியனே. (18)

இத்தலத்து எம்பெருமான் திருவேங்கடமுடையான் போன்ற திருவுருவம் உள்ளவராய் அன்பர்களின் இஷ்டங்களைப் பூர்த்தி செய்கின்றனர் என்பர். மிருகண்டு முனிவர் பத்தினயினது விருப்பத்தின்படி உப்பில்லாத பிரசாதங்களையே அமுது செய்கின்றனர் எம்பெருமான் என்பர். இப்பதி சோழ நாட்டில் திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது.

முகிலே! அருள் உருவத்திலும், வள்ளன்மையிலும் முகில் போன்றவனே! முகிலே அருள்-மேகம் போன்று, கைம்மாறு கருதாது, அருளும். பேறு பெற்றோர்-மார்க்கண்டேய முனிவர், பிருகு மகரிஷி. அகோராத்திரப்புனல்-புஷ்கரணி. வட்டுவத்தின்-வட்ட வடிவமான விமானம். பிராட்டி-பூமிதேவி; பிரான்-ஒப்பிலியப்பன். கிழக்கு நோக்கிய சந்நிதி; நின்ற திருக்கோலம். இப்பதியைத் திருவேங்கடமாகவே எண்ணிப் பிரார்த்தனை செலுத்துவோர் அதிகம்.

(17) இப்பாசுரம் சோழ நாட்டில் நன்னிலத்திலிருந்து 4½ மைல் தூரத்தில் உள்ள திருக்கண்ணபுரத்தைப் பற்றியது. இங்கே துதித்துப் பேறு பெற்றவர்-துண்டக முனிவரும் கண்வ முனிவரும். புந்திமிகும்-புத்தி மிகுந்த. நன்னீர்-நித்திய புஷ்கரணி, கந்தநன்னீரன்-வாசனைபொருந்திய தடாகத்தான்; விமானம்-உட்பலாவதகம், உத்பலாவதகம் என்றும் கூறுவர். அப்புரவல்லியின்- (நாச்சியார்) கண்ணபுரவல்லியோடு கூடிய பெருமாள் கிழக்கு திசை, நின்ற திருக்கோலம். எம்பெருமான் சௌரிராஜப் பெருமாள்,

இத்தலம் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர், நம்மாழ்வார் இவர்களால் பாடப் பெற்றது.

(18) இது திருவாலித் திருப்பதியைப் பற்றியது. இங்குத்

திருநாகை.

ஆல மருவு மொருநாக ராசனுக் கன்றருளும்
மால்உயர் சாந்த தடத்தோன் பொற்சுந்தர மானந்தனில்
நூலிடைச் சுந்தர வல்லியன் கீழ்கட ஞேக்கிநின்ற
காலழ கன் திரு நாகை யழகனைக் கண்டுய்மினே. (19)

திருநறையூர்.

மின்னிடை மேத முனிகனிக் கூமைவிளம்பச் செய்தோன்
மன்னெழில் வாவி யதுஞ்சினி வாசவி மானஞ்சிழக்
கன்ன வடிவ மூகிவா சுதேவனை யாதியவாங்
துன்னநின் றுன்நறை யூர்வடி வார்நம்பி தொன்மையனே. (20)

திருமங்கையாழ்வார் பாடிப் பேறு பெற்ருர் என்கிருர். 'ஆருந் தமிழுக்கு இன்பம் அருள்கலியன்' என்று திருமங்கை மன்னனின் பாடல் திறத்தைப் புகழ்கிருர். இது சோழ நாட்டில் சீர்காழி யிலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ள திருப்பதி. திருமகள் எம்பெருமானை ஆலிங்கனம் செய்தமையால் 'ஆலி' ஆயிற்று. இவ் ஊருக்கு அருகிலுள்ள வேதராஜ புரத்தில் பங்குனி உத்தரத்தில் திருமங்கையாழ்வார் திருமாலை வழிபறித்த வேடுபறி உத்ஸவம் நடக்கிறது. தீர்த்தம்–அலாதனி புஷ்கரணி, விமானம்-எண் சஞ் சனம் என்கிருர், இது யாதென்று தெரியவில்லை (அஷ்டாக்ஷரவி மானம் என்பர்) பிராட்டி-அமுதிற் பிறந்தாள். அம்ருதகூட வல்லி, திசை-மேற்கு, வீற்றிருக்கும் திருக்கோலம் எம்பிரான்–வயலாலி மணவாளன்.

குலசேகரர், திருமங்கையாழ்வார் இவர்களால் பாடப்பெற்ற தலம்.

(19) இது திருநாகை என்ற திருப்பதியைப் பற்றியது. சோழ நாட்டிலுள்ள நாகப்பட்டினம் என்பதும் இதுவே. இங்கே யுள்ள பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றவர் நாகராஜன். பொதுவாக ஆலம் மருவும் ஒரு நாகராஜன் என்றதால் இவர் யார் என்பது விளங்கவில்லை. தீர்த்தம்-ஸார புஷ்கரணி; விமானம்–சௌந்தர்ய விமானம்; பிராட்டி நூலிடைச் சுந்தர வல்லி, இடைசிறுத்த சௌந்தர்யவல்லி, திசை–கிழக்கேயுள்ள கடலைநோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். எம்பிரான் சௌந் தர்யராஜன். இவனை 'நின்ற காலழகன்' என்கிருர்.

இது நாகைக் காரோணம் என்ற சிறந்த சிவஸ்தலமுமாம்.

(20) இப்பாடல் திருநறையூர் என்ற நாச்சியார் கோயிலைப் பற்றியது. சோழநாட்டில் கும்பகோணத்துக்கு ஆறு மைல்

திருநந்திபுரம்.

தொன்மைப் பிரானிமி நந்திக்கு முன்வருந் தூயநந்தி
மென்மைத் தடத்தன னந்த விமானத்தன் மேற்றிசையாய்
மின்மைக்கண் சங்கவல் லிக்கீசன் விண்ணக ரீசன் துயில்
புன்மைத் தவிர்க்குஞ் செகனுத னந்தி புரப்பரனே. (21)

தொலைவில் உள்ளது. நறுமணம் மிக்க தலம் என்பது பற்றி இதற்குத் திருநறையூர் என்று திருநாமம். வடமொழியில் சுகந்தகிரி (நறுமலை) என்பர். நறை-வாசனை, இங்குக் கன்யாசுல்கமாக நாச்சியாருக்குப் பிராதானியத்தை எம்பெருமான் அளித்ததனால் இத்தலத்திற்கு நாச்சியார் கோவில் என்று ஒரு பெயர் வழங்குகின்றது

மேதமுனிகனிக்கு உண்மை விளம்பச் செய்தோன்-இத்தலத்து எம்பெருமான் மேதாவி முனிவரின் கன்னிகையைப் பலி என்னும் அரசன் கவர்ந்து செல்ல அவனைச் சபித்து அக்கன்னிகையை அம்முனிவர்க்கு அருள் செய்தனர் என்னும் புராணக் கதையொன்றுண்டு. தீர்த்தம்-எழில்வானி, விமானம்-ஸ்ரீநிவாஸ விமானம். கிழக்கு நோக்கிய சந்நதி, நின்ற திருக்கோலம். நாச்சியார்-அன்னவடிவழகி, எம்பெருமான்-நறையூர் வடிவார் நம்பி. இது திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற தலம்.

(21) இப்பாடல், திருநந்திபுரவிண்ணகரைப் பற்றியது. இதற்கு நாதன்கோயில் என்ற ஒரு பெயரும் உண்டு. இது சோழநாட்டில் கும்பகோணத்துக்கு மூன்று மைல் தொலைவில் உள்ளது.

இத்தலத்தில் பூசித்துப் பேறு பெற்றவர்கள் நிமி என்ற சூரிய குலத்தரசன் ஒருவனும், நந்தி தேவரும் ஆவர். நந்தி தேவர்க்கும் பிரத்யக்ஷமான தலமாதல் பற்றி இதற்கு 'திருநந்திபுர விண்ணகரம்' என்ற திருநாமம். நந்திமென்மை தடத்தன்-நந்தி தீர்த்தத்தை உடையவன்; விமானம்-அனந்தவிமானம் என்கிறார் இந்நூலாசிரியர், மந்தார விமானம் என்பார் பிள்ளைப் பெருமாளையங்கார். திசை-மேற்கு, கோலம்-சயன திருக்கோலம். நாச்சியார்-சங்கவல்லி என்னும் சம்பகவல்லி, மின்-ஒளி பொருந்திய. மைக்கண்-மையுண்ட கண நாதன்-ஜகந்நாதன் (நாதநாதன்)

இது திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற தலம்.

திருஇந்தளூர்.

புரந்தா ளெனுமிந்து முன்னுய்ந் திடுமிந்து புட்கரணி
வரந்தா னருளும்வே தாமோத மானத்தின் வன்குணபால்
சரந்தாழ் குழற்புண் டரீகயன் வீர சயனமுற்ற
திரந்தான் மருவினிய மைந்தன் இந்தளூர்ச் சின்மயனே. (22)

திருத்தில்லைச் சித்திரகூடம்.

மயங்காத கணணுவற் கும்பர்க்கு மின்பம் வழங்கவையோன்
வியன்காணும் புண்டரீ கத்தடஞ் சாற்று விகவிருப்பின்
நயங்கா ணெழிற்புண்ட ரீகையன் கீட்டிசை நண்ணித்துயில்
அயன்கோவிந் தன்தில்லைச் சித்திர கூடத் தரும்பொருளே.
(23)

---

(22) இத்திருப்பதி திருஇந்தளூர் எனப்படும். இது சோழ நாட்டிலுள்ள மாயூரத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. சந்திரன் பூசித்துத் தன் சாபம் நீங்கப் பெற்ற தலமாதலால் 'திரு இந்தளூர்' என்று இத்தலத்திற்குப் பெயர் என்பர். வடமொழியில் இதற்குச் 'சுகந்தவனம்' என்று வழங்குகிறது.

புரந்து ஆள் எனும் இந்து முன் உய்ந்திடும்-என்னைக் காப்பாற்றி அருள் செய் என்று சந்திரன் பூசிக்க, முன்னால் அவ்வண்ணமே அருள் செய்திட்டான். தீர்த்தம்-இந்து (சந்திர) புஷ்கரணி; வேதாமோத விமானம்: சரம்தாழ் குழல் புண்டரீகயன்-பூங்கொத்துக்கள் தொங்குகின்ற கூந்தலையுடைய பூண்டரீக வல்லி நாச்சியார். குணபால் வீரசயனம் உற்றதிரம்-கிழக்கு நோக்கிய சந்நிதியும் சயனத் திருக்கோலமும் உடைய மருவினியமைந்தன் என்பது எம்பெருமான் திருநாமம். பரிமளரங்கன் என்றும் அழைக்கப்படுவர். இத்தலம் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

(23) இது திருச்சித்திர கூடத்தைப் பற்றியது. தரு கோவிந்தராஜன் சந்நிதி என்பர் இதனை. சோழ நாட்டில் சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள தலம். சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமபிரானுக்கு வடநாட்டுச் சித்திரக்கூடத்தைப் போல் இத்தலமும் உகந்த திருப்பதியாகும்.

இத்திருப்பதியைத் துதித்துப் பேறுபெற்றவர்கள் கண்ணுவ் மகரிஷியும், தேவர்களும் ஆவார். தீர்த்தம்-புண்டரீக தீர்த்தம்,

திருச்சிராமவிண்ணகா.

அருந்தவஞ் செய்யட்ட கோண முனிக்கரு ளையன்சங்கம்
வருஞ்சக் கரத்தடத் தோன்புட் கலாவத்தம் வன்கிழக்காய்
பெருந்திரு மட்டவி ழுங்குழ லாகுரம் பெற்றுநின்ற
விரும்புந் தாட்டாளன் றன்சிராம விண்ணகர் மெய்ப்பொருளே (24

இருப்பு (விமானம்)-சாத்வீக விமானம், பிராட்டி-புண்டரீக வல்லி. கீழ்த்திசைத் துயில்—ஐயன் கிழக்கு நோக்கிய சந்நிதி, சயனத் திருக்கோலம். எதுகை நோக்கி ஐயன் அயன் என ஆயிற்று. க்ஷீராப்தி நாதன் போலச் சயனத் திருக்கோலமாகிச் சிவபிரான்து நடனத்தைப் பார்த்தவண்ணமிருக்கிறுர் என்பர். தில்லை (எள்ளுக் காடு) வனத்தின் நடுவேயுள்ள தலமாய் அமைந்தது பற்றித் தில்லைத் திருச்சித்திரகூடம் என்பார்கள். இத்தலம் குலசேகர ஆழ்வாராலும் திருமங்கை யாழ்வாராலும் பாடப்பெற்றது இங்குள்ள எம்பெருமான் கோவிந்தராஜப் பெருமாள்.

(24) இப்பாடல் சிராம விண்ணகரம் என்னும் தலத்தைப் பற்றியது. இது திருக்காழிச் சிராம விண்ணகரம் என்றும் கூறப் படும். சோழ நாட்டில் சீர்காழியிலிருந்து அரைமைல் தொலைவில் உள்ளது.

அட்டகோண முனிக்கு அருள் ஐயன்—அஷ்ட கோண மகரிஷிக்கு அருள் செய்த இடம். சங்கம் வரும் சக்கரத்தடத்தோன் (அவ்வப்போது) சங்கு வெளித் தோன்றும் சக்கரபுஷ்கரணியை யுடையவன். விமானம்—புஷ்கலா வர்த்தகம். கிழக்காய் நின்ற- கிழக்கு நோக்கிய சந்நிதி, நின்ற திருக்கோலம். பெரும் திருமட்ட விழுங்குழலாள். நாச்சியார் பெயர் மட்டவிழுங்குழலி – உரம் பெற்ற நின்ற தாடாளன்-தன் மார்பகத்தே அமைத்துக்கொண் டுள்ள பெருமாள் தாடாளன் என்பார்.

இத்தலம் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. இத்தலப் பெருமானைத் திரிவிக்ரமன் என்றும் கூறுவர். சீர்காழிப்பதி, பிரம் மாபுரம், தோணிபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, பூந்தாராய், சிரபுரம், புறவம், சண்பை, சீர்காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு பெயர்களை உடையது. இது சைவப் பெருந் தகையாரான திருஞானசம்பந்தர் அவதரித்த தலம்.

திருக்கூடலூர்.

மெய்த்தவஞ் செய்நந்த கற்கொரு மூன்றெனும் வீடுதந்தோன்
மொய்த்தொளிர் சக்கர நீர்சுத்த சத்துவ மூதிருப்பிற்
செய்த்தடந் தாமரை மேலிருந் தான்குண திக்குநின்றான்
கொய்த்துள வோன்வையங் காத்த பெம்மான் றிருக்கூடல்
மன்னே. (25)

திருக்கண்ணங்குடி

கூட லழிக்கும் விழியாளைக் கூடுங்கொல் கோதமற்கு
வீட ருளுந்தண் சவுனத் தடமும் விமானங்கிழக்
காடருள் சீருப் பலாவத கத்தி னரவிந்தை பால்
நீடரு ளாநின்ற மேகர் கணங்குடி நித்தரன்றே. (26)

---

(25) இப்பாடல் திருக்கூடலூரைப் பற்றியது. இதை ஆடு துறைப் பெருமாள் கோயில் என்றும் சொல்லுவர். சோழ நாட்டில் பாபநாசம் என்னும் ஊரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. தேவர்கள் கூட்டமாக வந்து எம்பெருமானைச் சேவிக்கும் தலமாதலால் 'திருக்கூடலூர்' என்று இத்தலத்திற்குத் திருநாமம் என்பர்.

இங்கு வழிபட்டுப் பேறு பெற்றவர் நந்தகமுனி என்பவர். தீர்த்தம்—சக்கர தீர்த்தம், சுத்த சத்துவ விமானம், பிராட்டி-பத்மாஸநி. கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். துளவ மாலையை யணிந்த வையங்காத்த பெருமாள் இக்கூடல் மன்னன்.

இங்கு இறைவன் சக்கரம் முதலிய ஐம்படைகளையும் ஏந்தி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றனர் என்பர் பிள்ளைப் பெருமாளையங்கார். திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற திருப்பதி இது.

(26) இப்பாடல் திருக்கண்ணன்குடி என்னும் திருப்பதியைப் பற்றியது. சோழ நாட்டில் கீவளூர் இரயில் நிலயத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது.

கௌதம முனிவர் வீடுபேறு பெற்ற தலம் இது. தீர்த்தம், சவுனத் தடம். விமானம்-உத்பல விமானம். கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம், பிராட்டியார்—அரவிந்தவல்லி, எம்பிரான் பெயர்-சியாமளமேனிப் பெருமாள் (மேகர்).

இத்திருப்பதி, தமிழ்நாட்டுப் பஞ்சகிருஷ்ண க்ஷேத்திரங்களுள் ஒன்று. கண்ணன் வாழ்கின்ற இடமாதலால் இத்தலத்திற்குத் 'திருக்கண்ணன்குடி' என்று பெயர். அதுவே கண்ணங்குடி என்று

திருக்கண்ணமங்கையூர்

நித்தன் வருண னெறிமார்க்கண் டேயனும் ரோமசனும்
கத்துந் தெரிசைப் புனல்உப் பலாவத கத்திலுயர்
புத்தமு தன்ன வபிடேக வல்லிமன் பூர்வநின்ற
பத்தர்க ளாவிப்பெம் மான்கண மங்கை பரஞ்சுடரே. (27)

திருக்கவித்தலத்தூர்

சுடரைக் கனியென்று பாய்ந்தவன் முன்வரும் தூயன்றுயர்
விடவ கெசேந்திர தீர்த்தனவே தாங்க விமானந்தனிற்
கடன்மின் னெடுகுண பாற்பொன்னி யாற்றங் கரைகிடக்கும்
படரக் கவித்தலத் தானையைக் காத்த பராபரனே. (28

வழங்குவதாயிற்று. இது அகத்துறைப் பாடல், கூடல் அழித்தல் துறையைச் சார்ந்தது. கூடலழிக்கும் விழியாள் - தான் இழைத்த கூடலைத் தன் கண்ணீர் கொண்டேயழித்திடும் விழியாள்.

திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருப்பதி இது. இத் தலத்தைப் பற்றி 'உறங்காப்புளி, ஊறாக்கிணறு, காயாமகிழ், தீரா வழக்கு, திருக்கண்ணங்குடி' என்று ஒரு பழமொழி வழங்கும்.

(27) இது திருக்கண்ணமங்கையைப் பற்றிய பாடல். சோழ நாட்டில் திருவாரூருக்கு நான்கு மைல் தொலைவில் உள்ளது.

இத்தலத்தில் பூசித்துப் பேறுபெற்றோர் வருணன், மார்க் கண்டன், ரோமசன் என்பவர். கத்தும்நித்தன்—(இவர்கள்) துதி செய்யும் நித்தன். கத்து—ஓதுதல். தெரிசைப்புனல்-தர்சனபுஷ் கரணி. உத்பலவிமானம், புதுஅமுதன்ன அபிடேக வல்லிமன்-புதிய அமுதம் போன்ற அபிஷேக வல்லியின் கணவன். கிழக்கு நோக்கிய சந்நிதி, நின்ற திருக்கோலம். இறைவன் திருநாமம்-பத்தர் ஆவிப்பெருமாள் (பக்தவத்ஸலன்)

இங்குத் தாயார் சந்நிதியில் தேன்கூடு பூசை பெறுகிறது என்பர். இத்தலத்திற்குத் திருமங்கை யாழ்வாரின் பாசுரங்கள் பதினொன்கு உள.

(28) இப்பாடல் திருக்கவித்தலத்தைப் பற்றியது. இது கபிஸ்தலம் என்று இப்போது வழங்கப்படுகிறது. சோழநாட்டில் பாபநாசத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

சுடரைக் கனியென்று பாய்ந்தவன்—அனுமன். துயர்விடமுன் வரும் தூயன் எனஇயைத்து துன்பம் நீங்க முன்வந்து அருளும் விமலன் என்க. கபி, கவி,—குரங்கு, சிறிய திருவடி, கவிக்கு

திருவெள்ளியங்குடி

பராசர னிந்திரன் சுக்கிரன் வேதன் பணியவரும்
கிரேத யுகன்சுக் கிரதீர்த்தன் புட்பலத் திற்கிழக்காய்
விராவு மரகத வல்லி யுடன்றுயில் கோலவில்லின்
இராமன் றனைவெள்ளி யங்குடி யிற்கண் டிறைஞ்சுமினே. (29)

திருமணிமாடக் கோயில்

இறைஞ்சிக் கசேந்திர னிந்திர னேக தசருத்திரர்
திறஞ்செப்பு ருத்திர வாவி விமானந் திகழ்பிரணவத் (து)
அறஞ்செய் கொழும் புண்டரீகையன் கீழ்நின்று னக்கரியான்
நறுஞ்செய்த தண்ணுங்கை மணிமாடக் கோயினந் தாவிளக்
கே. (30)

அருளியதால் இத்தலம் கவித்தலம், கபிஸ்தலம் என்று பெயர் பெற்றது. கஜேந்திர புஷ்கரணி. துயர்விட அக்கஜேந்திரன் என்பதால் கஜேந்திரனுக்கும் முத்தியளித்த தலம் என்று கொள்ளலாம்: வேதாங்க விமானம். கடல்மின்னேடு—திருப்பாற் கடலிற்றேன்றிய இலக்குமி தேவியுடன். குணபால் கிடக்கும்—கிழக்கு நோக்கி சயனித்திருக்கும். பொன்னியாறு-காவிரி. இறைவன் பெயர்-கஜேந்திரவரதர் என்றும் இறைவியின் பெயர் ரமாமணிவல்லி என்றும் கூறுவர். யானையைக் காத்த பராபரன்-கஜேந்திரனுக்கு அருள்புரிந்த தேவதேவன். இத்தலம் திருமழிசை யாழ்வாரால் பாடப் பெற்றது.

(29) இப்பாடல் திருவெள்ளியங்குடியைப் பற்றியதாகும். இத்தலம் சோழநாட்டில் திருவிடைமருதூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்து இறைவனைப் பூசித்துப் பேறு பேற்றேர் பராசரமுனிவர், இந்திரன், சுக்கிரன், பிரம்மா ஆகியோர். தீர்த்தம்-சுக்கிரதீர்த்தம், விமானம்-புருகலாவர்த் தகம், சந்நிதி-கிழக்கு, துயில்கின்ற கோலம், மரகதவல்லியுடன் விராவும்-மரகதவல்லிப் பிராட்டியாருடன் பொருந்தி. எம்பிரான் நாமம்-கோலவில்லிராமன். கிரேதயுகன்-ஊரின் தொன்மை குறித்து கிரேத யுகன் என்றூர்.

சுக்கிராச்சாரியனுக்குப் பிரத்யக்ஷமான தலமாதலால் இத் திருப்பதிக்கு 'திருவெள்ளியங்குடி என்று பெயர் (சுக்கிரன்—வெள்ளி) பார்க்கவபுரி என்று இத்தலத்திற்கு வடமொழியில் ஒரு பெயர் வழங்குதலும் உண்டு. இது திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்றது.

(30) இது திருமணிமாடக் கோயில் என்னும் தலத்தைப்

திருவைகுந்த விண்ணகர்

விளங்குத் தவஞ்செய் மதங்கனுஞ் சேதுநல வேந்தனுமுய்
வளங்கொள் இலக்குமி வாவியன் சத்தியா வர்த்தகத்தின்
கிளந்தொளிர் வைகுந்த வல்லிதன் னூடு கிழக்கிருந்த
களங்கமில் வைகுந்த விண்ணகர் தாமரைக் கண்ணெந்தையே. **(31)**

திரு அரிமேய விண்ணகர்

எந்தை யெனக்குக் குருதெய்வம் நீயென் றெழில்மதங்கன்
சிந்தைசெய் தேற்று மமுதப் புனலுச்ச சிங்கத்தெழில்
விந்தை யமுத கடவல்லி மேற்றிசை வீற்றிருக்க
வந்த அரிமேய விண்ணூர்க் குடமாடும் வன்கூத்தனென்றே. **(32)**

பற்றியது. சோழநாட்டில் சீர்காழியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இது முதல் கூறப்படுகின்ற திருப்பதிகள் பதினொன்றையும் 'திருநாங்கூர்த்திருப்பதிகள்' என வழங்குவர். அழகிய உபரிகை வீடுகள் நிறைந்து எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற தலமாதலால் இத்தலத்திற்குத் 'திருமணிமாடக்கோயில்' என்று பெயர் வந்தது போலும்.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றோர். கஜேந்திரன், இந்திரன், ஏகாதச ருத்திரர் ஆவர். ருத்திர புஷ்கரணி விமானம்- பிரணவ விமானம், கொழும்–வளம் பொருந்திய. நாச்சியார்– புண்டரீகவல்லி, கிழக்கு சந்நிதி, நின்ற திருக்கோலம், நந்தாவிளக்குப்பெருமாள்.

இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் பாடிய பாசுரங்கள் பன்னிரண்டு உள.

(31) இப்பாடல் திருவைகுந்தவிண்ணகரத்தைப் பற்றியது. இதுவும் சோழநாட்டில் சீர்காழியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இங்குப் பூசித்துப் பேறு பெற்றோர் மதங்க மகரிஷியும், சேது வேந்தனும் ஆவர். இச்சேதுவேந்தன் இன்னாரென விளங்கவில்லை. உய–உய்ய. இலக்குமி தீர்த்தம். ஸத்தியாவர்த்தக விமானம். பிராட்டித்திருநாமம் - வைகுந்தவல்லி. கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலம். இறைவன் திருநாமம் வைகுந்த நாதன். தாமரைக் கண்ணுடைய பிரான்.

இப்பதி திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது போலவே இத்தலத்திலும் வீற்றிருந்த திருக்கோலமாகச் சேவை சாதித்தலால் 'திருவைகுந்த விண்ணகரம்' என்று பெயர் பெற்றதென்பர்.

(32) இப்பாடல் திருஅரிமேய விண்ணகரத்தைப்பற்றியது.

திருமணிக்கூடம்

என்று மழிவில் மறையிந்து உவணனுக் கின்பளித்தோன்
மன்றிந்து வாவிப் பிரசவ நாப விமானத்தொளிர்
துன்றுந் திருமா மகளுடன் கீட்டிசை தோய்ந்துநின்றான்
நன்றின் பருளெம்பி ரான்மணிக் கூடத்த நாயகனே. (33)

திருத்தேவனார் தொகை

நாயடி யேனுய்யக் கோண்டான் வசிட்டற்கு நன்களித்தோன்
தூய்அத்தி வாவி யுடையோன் விமான சுபகரத்தில்
ஏயபைங் தோகை யுடன்மேற் றிசையி னிசைந்துநின்றோன்
மாய மணாளதிருத் தேவ னார்தொகை மாதவனே. (34)

இது சோழநாட்டில் சீர்காழிக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ளது. வழிபட்டுப் பெறுபெற்றோர் மதங்க முனிவர். நீயே என்நற்குரு, தெய்வம் என்று தியானித்து வழிபட்ட மதங்கன் என இயைக்க. அமுதப்புனல் தீர்த்தம்; உச்சசிருங்க விமானம். சிங்கம்-சிருங்கம் மருஉ. பிராட்டி-அமுதகடவல்லி, மேற்றிசை நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலம். எம்பிரான் பெயர்-குடமாடும் கூத்தர். இத்தலத்திற்கு இப்பெயர் வந்த காரணம் தெரியவில்லை. திருமங்கையாழ்வார் இத்தலப்பெருமாளைப் பாடியுள்ளார்.

(33) இப்பாடல் திருமணிக்கூடத்தைப் பற்றியது. பிள்ளைப் பெருமாளையங்கார் இதை 37-வது திருப்பதியாகப் பாடியுள்ளார். இப்பதி சோழநாட்டில் சீர்காழிக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இங்கு வழிபட்டுப் பேறுபெற்றோர்: என்றும் அழிவில்லாத வேதங்கள். சந்திரன், கருடன் (பெரிய திருவடி) மன்று பிரச இந்துவாவீ-பொருந்திய தேன்சிந்தும் சந்திரபுஷ்கரணி. நாப விமானம்: சாம்பூநதம் என்னும் பொன்னால் செய்த கனகவிமானம். திருமாமகள் நாச்சியார், கீழ்த்திசை நோக்கி நின்ற திருக்கோலம். பெருமாள் மணிக்கூட நாயகன். இத்தலம் திருமங்கை ஆழ்வாரின் பாடல் பெற்றது.

(34) திருத்தேவனார் தொகை என்ற திருப்பதியைப்பற்றியது இப்பாடல். தேவர்கள் சபை கூடின இடமாதலால் இத்திருப்பதிக்குத் 'திருத்தேவனார் தொகை' என்று பெயராயிற்று எனலாம். சிறப்பு வாய்ந்த திருத்தேவனார் தொகை என்னும் திவ்ய தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமால், பாரிஜாத விருட்சத்தை தேவலோகத்தினின்று பேர்த்துக் கொணரும்போது பாஞ்ஜசன்யம் என்னும் தன் சங்கைத் தன் வாயிலே வைத்து ஊதுகையில் அச்

திருவண்புருடோத்தமம்

மாதவஞ் செய்யுபமன்ய முனிக்கருள் மாரிசெழுஞ்
சீதநற் பாற்கடல் வாவிவி மானசச்சஞ் சீவனத்தின்
தீதறு தேவிதன் னூர்பே ரொன்றுலக் குணதிக்கி னின்றுன்
ஓதரன் சாபந் தவிர்த்தருள் வண்புரு டோத்தமனே, (35)

சங்கின் பேரரவம் கேட்டு தேவர்களின் கூட்டம் மூர்ச்சித்து விழ, அண்டங்களும் கலங்கின என்பர்.

இத்தலம் சோழநாட்டில் சீர்காழியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. இங்கு வழிபட்டுப் பேறுபெற்றவர் வசிஷ்டர். தூய அத்தி தீர்த்தம். சோபன விமானம், நாச்சியார் பெயர் பைந்தோகைப்பிராட்டி. மேற்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். இறைவன் நாமம் மாதவப் பெருமாள் என்பது. திருமங்கையாழ்வாரின் பாசுரம் பத்து இதற்குண்டு.

இத்தலத்தைப் பற்றி ஆசிரியர் விசேஷமாகக் கூறுவது இங்குத் தன்னையும் இத்தெய்வநாயகன் உய்யக்கொண்டோன் என்பதுதான்.

(35) இப்பாடல் திருவண்புருடோத்தமம் என்னும் திருப்பதியைப் பற்றியது. இது சோழநாட்டில் சீர்காழியிலிருந்து 5மைல் தொலைவில் உள்ளது. இங்குப் பூசித்துப் பேறுபெற்றவர் உபமன்யு முனிவர், தீர்த்தத்தின் பெயர் திருபாற்கடல், சஞ்சீவி விமானம், தேவி புருஷோத்தம நாயகி எனப்படுவர். கிழக்கு நோக்கிய சந்நிதி, நின்ற திருக்கோலம். புருஷோத்தமன் என்பது இறைவன் பெயர். இவன் அரனுடைய சாபத்தைத் தீர்த்தருளினன் என்பர் ஆசிரியர்.

இது திருமால் உறையும் மிக முக்கியமான திருப்பதிகளில் ஒன்றாகவும், திருவரங்கம், திருவேங்கடம், குடந்தை, திருமாலிருஞ்சோலைமலை, துவாரகை முதலிய தலத்துடன் வைத்து எண்ணப்படுவதும் என்பர் அஷ்டப்பிரபந்த ஆசிரியர். விண்ணிலும் மண்ணிலும் உறைகின்ற ஆடவர் யாவரினும் உத்தமன் எனப் பொருள்படும், புருஷோத்தமன் என்பது இறைவன் திருநாமம். புருஷோத்தமன் எழுந்தருளியிருக்கின்ற வளப்பமுள்ள திருப்பதியை திருவண்புருடோத்தமம் என்றார். இது திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

திருச்செம்பொன்செய் கோயில்

உத்தம ஞாந்திரி நேத்திரற்கி ராகவ ஞெண்மகத்தில்
சித்திய தாம்பர னித்திய வாவி திகழ்கனகச்
சுத்த விமானம் மலராள் குணதிசை தோய்ந்துநின்ற
அத்தன்உயர் செம்பொன் செய்கோயிற் பேரரு ளாளனன்றே
(36)

திருத்தெற்றியம்பலம்

ஆளும் பிரான்றிரு மாதோ டனந்தற் கருள்புரிந்தோன்
நீளும் அனந்தச் சரசோன்றெய் வப்பெயர் நேரிருப்பில்
நாளுங் கிழக்கு முகஞ்செங் கமலையை நண்ணித்துயில்
தாளுந்திகைச் செங்கண் மால்தெற்றி யம்பலத் தற்பரனே.
(37)

திருக்காவளம்பாடி

தற்பர னேயென் றரிமித்திரன் சேனைத் தலைவர்தொழும்
சிற்பர னேமப் புனலோனுத் துங்கச் சினகரத்தின்
அற்பின் மடவரன் மங்கை யுடன்கிழக் கார்ந்துநின்ற
பொற்புயர் காவளம் பாடி நங்கண்ணல் புராதனனே. (38)

---

(36) இப்பாடல் திருச்செம்பொன் செய்கோயில் என்னும் தலத்தைப் பற்றியது. இதுவும் சோழநாட்டுத் தலம், சீர்காழிக்கு 5 மைல் தொலைவில் உள்ளது. முக்கண்ணனுகிய சிவன் யாகம் செய்து பேறு பெற்ற பதி இது. நித்திய புஷ்கரணி தீர்த்தம். கனகவிமானம். நாச்சியார் திருநாமம் மலராள், அதாவது அல்லி மாமலர் நாச்சியார் என்பது. கிழக்கு சந்நிதியும், நின்றத் திருக் கோலமும், இறைவன் பெயர் பேரருளாளன் என்பர். அழகிய பொன்னல் செய்யப்பட்ட கோவில் என்பது இதன் பொருள். இது திருமங்கையாழ்வார் பாசுரம் பெற்ற தலம்.

(37) இப்பாடல் திருத்தெற்றியம்பலம் என்னும் திருப்பதியைப் பற்றியது. இது சோழ நாட்டில் சீர்காழியினின்று 5 மைல் தொலைவிலுள்ளது. இங்குப் பூசித்து அருள் பெற்றோர் நாச்சியாரும், அநந்தாழ்வாருமாவர். அநந்த புஷ்கரணம். செங்கண் மால் விமானம். கிழக்கு பார்த்த சந்நிதி, சயனத் திருக்கோலம், இறைவனின் திருநாமம் செங்கண்மால். இப்பிரானுடைய தாள், உந்தி, கை, கண் யாவுமே சிவந்த நிறம். தெற்றி அம்பலம் என்பதற்குக் கோயில் முதலியவற்றில் மேட்டிடமாக அமைந்த மன்றம் என்பது பொருள். தெற்றி-திண்ணை. இதற்குத் திருமங்கையாழ் வாரின் பாசுரம் உண்டு.

(38) இப்பாடல் திருக்காவளம்பாடி என்னும் திருப்பதியைப்

திருவெள்ளக்குளம்

தனதனைப் பாகுஞ் சுவேதமன் னற்கவச் சாவகலத்
துனியறுத் தாளுஞ் சுவேதத் தடந்தத் துவச்சோதிதனில்
இனிதிரு மாம களின்புறக் கீழ்திசை யெய்ந்துநின்ற
நனிதிரு வெள்ளக் குளத்தண்ணல் நீடருள் நாரணனே. (39)

திருப்பார்த்தன் பள்ளி

நாரண ஞரணம் பற்குணன் பன்னொரு நம்பர்க்கருள்
பூரணன் கங்கைப் புனல்நார ணுக்கியப் புகழிருப்பின்
காரணன் றுமறை யாள்கேள்வன் மேற்கிற் களித்திருந்தான்
பாரணங் கிற்புகழ் சேர்பார்த்தன் பள்ளிப் பரம்பரனே.(40)

பற்றியது. இது சோழ நாட்டில் வைத்தீசுரன் கோயிலிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இங்குள்ள இறைவனைப்பாடிப் பேறு பெற்றோர் ருத்திரனும் சேனைத் தலைவரும். ஏமப் பொய்கை என்பது தீர்த்தத்தின் பெயர். உத்துங்க விமானம். நாச்சியார் பெயர் மடவரமங்கை. கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக் கோலம். இறைவனின் திருநாமம் கண்ணன் என்பது. இதற்குத் திருமங்கையாழ்வாரின் பாசுரம் உண்டு. அரிமித்திரன் -சிவன்.

(39) இப்பாசுரம் திருவெள்ளக் குளத்தைப் பற்றியது. இது சோழ நாட்டில் சீர்காழியை அடுத்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. இங்குப் பேறு பெற்றவர் குபேரனுக்கு ஒப்பான சுவேத மன்னன் என்பவன் தனதன்—குபேரன். இம்மன்னன் அவச்சாவு அகல இத்தலத்திறைவனை வழிபட்டான். துனி-துன்பம். இத் தீர்த்தத்தின் பெயர் சுவேதத் தடம் என்னும் வெள்ளக்குள தீர்த்தம். இத் தீர்த்தத்தின் பெயரே திருப்பதிக்கும் ஆயிற்று. இது பிறவித் துன்பத்தை அறுத்து ஆளக்கூடியது. தத்துவ விமானம். இறைவியின் நாமம் திருமாமகள். கிழக்கு நோக்கிய சந்நிதி, நின்ற திருக்கோலம். இறைவன் பெயர் நாராயணன். திருமங்கை யாழ்வாரின் பாடல் பெற்ற தலம் இது.

(40) திருப்பார்த்தன் பள்ளி என்ற திருப்பதியைக் குறிக்கிறார் இப்பாசுரத்தில். இது சோழ நாட்டில் சீர்காழியிலிருந்து 7 மைல் தொலைவில் உள்ளது. பேறு பெற்றோர் பற்குணன் என்னும் அருச்சுனன். வேதம் (ஆரணம்), ஏகாதசருத்திரர் ஆவர். சங்க தீர்த்தம், நாராயண விமானம். நாச்சியார்-தாமரைநாயகி, இறைவன் நாராயணன். மேற்கு சந்நிதி. நின்ற திருக்கோலம்.

இதற்குத் திருமங்கையாழ்வார் பாசுரம் உண்டு. (இதுவரை 40 பாடல்களும் சோழநாட்டுத் திருப்பதிகளுக்கு உரியன.)

திருமாலிருஞ்சோலை

பரமன் னியம னெடுமலை யத்துவச பாண்டியனும்
வரமுற நூபுர நன்னதி சந்திரவி மானஞ்சவுந்
தரவல்லி சுந்தரத் தோன்கீழ்த் திசை நின்ற தாளழகன்
சுரர்பர வுஞ்சங் தனத்தரு மாலிருஞ் சோலைமன்னே. (41)

திருக்கோட்டியூர்

இருக்கோர் கதம்ப முனிக்கரு ளுங்தெய்வ வீர்ந்தடத்தோன்
மருக்கேழட் டாங்க விமானந் தனிற்திரு மாமகளோடு
அருட்கிட் டிசைதுயில் வைகுந்த நாதன் அரவணையான்
திருக்கோட்டி யூர்ச்சொக்க நாரண னெஞ் சச்சிதானந்தனே.
(42)

---

(41) இப்பாடல் திருமாலிருஞ்சோலைமலை என்னும் அழகர் கோயிலைப்பற்றியது. இது முதல் ஆசிரியர் பாண்டி நாட்டுத் திருப்பதிகளைப் பற்றிக் கூறுகிறார். இத்தலம் மதுரையிலிருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது.

பேறு பெற்றோர் யமதர்மராஜனும், மலையத்துவச பாண்டியனும் ஆவர். தீர்த்தம்-நூபுரநன்னதி என்கின்ற சிலம்பாறு. சந்திர விமானம். நாச்சியார் திருநாமம் - சவுந்தரவல்லி. இறைவன்—சுந்தரன் என்னும் அழகன். சந்நிதி-கிழக்கு. நின்ற திருக்கோலம், சுரர்—தேவர்கள். பரவும்—வணங்கும்.

இத்தலம் மிகப்பிரசித்தி பெற்ற வைணவ திருப்பதி. இதற்கு 128 பாசுரங்கள் உண்டு

இத்தலத்தை, திருக்கூடல், மதுரைக்கூடல், அழகர் கோயில் என்பர். பட்டர்பிரான் என்ற பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய தலம். இத்திருப்பதி முருகனுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழமுதிர் சோலையாகும். இத்திருப்பதியைப் பற்றிய விவரங்கள் பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய அழகர் கிள்ளை விடு தூது என்னும் ஐயரவர்கள் பதிப்பித்த நூலின் முகவுரையில் காணலாம். இதற்கருகிலுள்ள மதுரை பெரிய சிவஸ்தலங்களில் ஒன்று. மீனாக்ஷி-சுந்தரேசுரர் உறையும் இடம். மறுபக்கத்தில், முருகக்கடவுளின் படைவீடுகளில் ஒன்றாகிய திருப்பரங்குன்றம் உள்ளது.

பரமனரியமன் என்று பாடமோதின், அரியமன் என்பது பித்ருக்களின் தலைவனைக் குறித்து நிற்கும்.

(42) திருக்கோட்டியூரைப் பற்றியது இப்பாடல் (இதுபாண்டி நாட்டுத் திருப்புத்தூருக்கு 21 மைல் தொலைவில் உள்ளது.) பேறு பெற்றோர் கதம்பமுனி என்பவர். தெய்வபுஷ்கரணி. அஷ்டாங்க

திருமெய்யம்

ஆனந்த மாஞ்சத் தியதே வதைக்கும னந்தற்குமருள்
ஈனங் தவிர்சத் தியப்புனல் சத்திய வோரிருப்பில்
வானந் தனிலுய்ய வந்தா ளுடன்றென் றிசைக்கண்வளர்
கானம் பலாத் திருமெய்ய மெய்யன்மெய்க் கதிநமக்கே.(43)

திருப்புல்லாணி

மெய்யன் சமுத்திரன் புல்லவ னுக்கருள் வேந்தசுவம்
மையறு சக்கர நீர்புண்ட ரீக விமானத்தருட்
செய்யவொண் பூவி லிருந்தா ளுடன்குண திக்கிருந்த
தெய்வச் சிலையனைப் புல்லாணி நாதனைச் சேர்ந்துய்மினே(44)

விமானம். திருமாமகள் நாச்சியார். கிழக்கு சந்நிதி, துயில் திருக்கோலம். திருமால் திருநாமம் சொக்கநாராயணர். இங்குள்ள கர்பக்கிரஹம் அல்லது கருவறை நான்கு தளங்களாய் உள்ளது தரை மட்டம் (சயனம்) மேல்மட்டம் (நின்ற கோலம்) அதன் மேல்மாடி (வீற்றிருந்த கோலம்) தரைகீழ்முட்டம் (நடன கிருஷ்ணன்) இரணியனை ஒழிப்பதற்குத் தேவர்கள் கோஷ்டியாக வந்து ரகஸ்ய ஆலோசனை செய்த இடம். பிரகாரத்தில் வடபுறம் இரணியனை ஓடிப்பிடிப்பது போலவும். மார்பைப் பிளப்பது போலவும் சிங்கப்பிரான் திருவுருவங்கள் இரண்டுள்ளன. ஆகையால் இத்தலத்தில் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் கூத்தாடியும் சேவை சாதிக்கும் திருக்கோலங்கள் உள்ளன. கோஷ்டிபுரம்-கோட்டியூர்.

திருக்கோட்டியூர் நம்பிகளிடம் திருமந்திர மறைப்பொருளை ரகஸ்ய உபதேசம் பெற்று குருவின் ஆசியை மீறிக் கோபுரத்தின் மேலேறி அனைவருக்கும் வெளியிட்ட இராமாநுசர் திருவுருவம் கோபுரத்தின் மேலே வைக்கப்பெற்றுள்ளது. திருக்கோட்டியூர் நம்பிகளுக்கும் இராமனுசருக்கும் தனித்தனியே சந்நிதிகள் உண்டு.

(43) திருமெய்யம் எனும் இத்திருப்பதி திருமயம் இரயில் நிலையத்திலிருந்து ½ மைல் தூரத்தில் உள்ளது.

இத்தலத்தைப் பூசித்துப் பேறு பெற்றோர் சத்திய தேவதையும் அனந்தனும். சத்தியதீர்த்தம். சத்தியகிரிவிமானம். உய்யவந்த நாச்சியார். தெற்கு நோக்கிய சந்நிதி. துயில் திருக்கோலம். பலா விருட்சம். இறைவன் நாமம் மெய்யப்பன் என்கிற சத்தியமூர்த்தி. சத்தியகிரிநாதன். மெய்-சத்தியம். திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற தலம்.

(44) திருப்புல்லாணி என்பது திருப்புல் அணை என்பதன்

திருமோகூர்

சேர்ந்தோ துந் தேவ ரெவர்க்குந் திருவருள் செய்திலங்கும்
ஈர்ந்தாள்நல் தாமரைப் பாற்கடல் வாவியோ டொண்கிழக்காய்
ஆர்ந்தோங்கு கேதகி மானத்த வூர்வல்லி யாரநின்ற
தேர்ந்தோரு றைதிரு மோகூர்மை மேகர்தஞ் சேவடியே. (45)

திருத்தண்கால்

சேவடி நண் ணும் புலிச்சந்திர வல்லவன் சித்திபெற்ற
பாவ விநாசத் தடந்தேவ சந்திரப் பம்பிருப்பில்
நால்வர்மின் ஞூர்குண நின்றதண் காலெந்தை நன்கறியார்
தேவருந் தேவர் பிரா னு மய னும் சிவ னுமன்றே. (46)

சிதைவு. வடமொழியில் தர்ப்பசயனம் என்பர். இது இராமநாத புரத்துக்குத் தென்கிழக்கே 5 மைல் தொலேவில் உள்ளது. புல்லாரண்ய ரிஷிக்கும். சமுத்திரராஜனுக்கும் அஸ்வத்த நாரா யணனுக்கும் அருள் பாலித்த இடம். சக்கர தீர்த்தம். புண்டரீக விமானம். நாச்சியார்-பூவில் இருந்தாள். கிழக்கு சந்நிதி, இருந்த கோலம். இறைவன் பெயர் தெய்வச்சிலேயன்.

புல்லவன்-புல்லாரணியரிஷி. மையறு சக்கரநீர்-குற்றத்தைத் தீர்க்கின்ற சக்கர தீர்த்தம்.

கோயில் பிரகாரத்தில் சக்கரவர்த்தித் திருமகனை ஸ்ரீராமன் தர்ப்பையில் சயனக் கோலமாகச் சேவை சாதிக்கிறூர். இங்குத் தான் வருண பகவானும், விபீஷணனும்வாரும் அடைக்கலம் புகுந்தது. இத்தலத்தைச் சுற்றியுள்ள தலங்கள் உத்தரகோச மங்கை, இராமேசுரம், தனுஷ்கோடி முதலியன. திருமங்கை யாழ்வாரின் பாசுரம் பெற்றது.

(45) திருமோகூர் என்னும் தலத்தைப்பற்றிய செய்யுள் இது. மதுரைக்கு 7 மைல் தொலேவில் உள்ளது. வடமொழியில் ஸ்ரீமோகனபுரம் எனப்படும்.

பெறு பெற்றூர்-அயன், ருத்திரன், பிறதேவர்கள் யாவரும். பிராட்டி-மோகூர்வல்லி, தீர்த்தம்-க்ஷிராப்தி புஷ்கரணி. பாற்கடல் வாவி. கேதகிவிமானம். கிழக்கு சந்நிதி. நின்ற கோலம். இறைவன் திருநாமம்-மைமேகர் என்ற காளமேகப்பெருமாள். திருமங்கை யாழ்வாராலும். நம்மாழ்வாராலும் பாடப்பெற்ற தலம். இறைவன் பால் மோகத்தை (பக்தி) அருளும் ஊர் என்பது மோகூர் எனவாயிற்று.

(46) இப்பாடல் திருத்தண்கால் எனும் திருப்பதியைப்

திருக்கூடல் (மதுரை)

சிவவாக் கியற்குப் பரத்துவந் தேற்றிய செல்வநம்பி
தவ்வம்ப ரீடன் சனகாதி யற்கருட் சக்கரநீர்
திவன்குண பாலினட் டாங்க விமானந் திகழ்மதுரை
யவளோ டிருந்த மதுரையங் கூட லழகண்ணலே. (47)

பற்றியது. இதைத் தண்கால், திருத்தண்காலூர் என வழங்குவர். சிவகாசியிலிருந்து 2மைல் தூரத்தில் உள்ளது.

பேறுபெற்றோர் ; புலி, ஸ்ரீவல்லபன், சந்திரன், தீர்த்தம்-பாவ விநாசத்தடம். விமானம்-தேவசந்திர விமானம். இங்குப் பிராட்டியார் நால்வர், அன்ன நாயகி, அநந்தநாயகி, அமிர்த நாயகி, ஜாம்பவல்லி ஆகியோர். கிழக்குப் பார்த்த சந்நிதி, நின்ற கோலம். இறைவன் தண்கால் அப்பன், இப்பரமனை எல்லாத் தேவர்களும், இந்திரனும் அயனும், சிவனும் வணங்குவர்.

திருமங்கை மன்னன், பூதத்தாழ்வார் இருவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

(47) இது திருக்கூடலைப்பற்றிய பாசுரம். இதை மதுரைக் கூடலழகர் கோயில் என்பர். இது மதுரை நகரில் ஒரு பகுதியாகும். கூடல் என்பது தென்மதுரைக்கு ஒரு பெயர்.

இங்குப்பூசித்துப் பேறு பெற்றோர். சிவவாக்கியர், செல்வநம்பி, அம்பரீஷன், சனகாதியர். சக்கர தீர்த்தம். அஷ்டாங்க விமானம். நாச்சியார்-மதுரைவல்லி. இறைவன் - கூடலழகர். கிழக்கு சந்நிதி. உட்கார்ந்த கோலம். திவன்-பரமபதத்தன்.

பெரியாழ்வார் மதுரைநகரின் மன்னனுன ஸ்ரீவல்லதேவப் பாண்டியனது வேண்டுகோளின்படி பரதத்வநிர்ணயம் செய்ய அது கண்ட அம்மன்னவன் மனமுவந்து இவரை யானை மேலேற்றி கூடல் நகரை வலஞ்செய்வித்த போது, பிராட்டியுடனே பெருமாள், விண்ணவர் புடைசூழ வானத்தில் எழுந்தருள எவருடைய கண்ணெச்சிலும் படாமலிருக்கத் ' திருப்பல்லாண்டு ' பாடினுர் ' தாழ்விலாப் பாடலழகர் புதுவை பட்டர்பிரான் கொண்டாடும் கூடலழகர் ' என்கிறுர். இவ்வாழ்வாருக்குத் தரிசனம் தந்த அவ்வெம்பெருமான் அஷ்டாங்கவிமானத்தின் மீது எழுந்தருளியிருக்கின்ற, வையந்தாய பெருமான் என்பர்.

இப்பதியைப் பாடிய ஆழ்வார்கள் திருமங்கை மன்னனும் திருமழிசைப் பிரானும். செல்வநம்பியும், திருக்கோட்டியூரில் உள்ளவர்க்குத் தலைவரும், பாண்டியராசனும் ஆகியோர் பெரியாழ்வார் மதுரை சென்று பரதத்துவ ஸ்தாபனம் செய்வதற்கு மூலகாரணமாயிருந்தவர்கள்,

திருவில்லிபுத்தூர்

அண்ண லெனும்பட்டர் கோன்றவ மண்டுகற் கார்ந்தருள்வோன்
வண்ண மகிழ்முக் குளத்தோன் பொற்சஞ்சன மானந்தனில்
தண்ணலர் கோதை யுடன்பூர்வ மாலிற் சயனமுற்று
நண் ணும் அரங்கமன் வில்லிபுத் தூர்த்திரு நாட்டரசே. (48)

திருக்குருகூர்

நாத முனிமது ரக்கவி மாறன்மன் னற்சக்கரன்
வேதன் புவிக்கருள் வோன்பிர மத்தடம் விண்ணவர்சூழ்
கோதகல் கோவிந் திராதி கிழக்கிற் குருகைமின்னே
டோதநின் ருன்குரு கூராதி நாத னொருபொருளே. (49)

---

(48) இது ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திருப்பதியைப் பற்றிய பாசுரம். வில்லி, கண்டர் என்பவர்களில் மூத்தவனை வில்லி யென்பவனால் நிர்மாணிக்கப்பட்ட புதிய நகரமாகையால் இதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் என்று பெயர் என்பர். இது இராமநாதபுரம் மாவட்டத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் இரயில் நிலையத்துக்கருகே உள்ளது. பெரியாழ்வார், ஆண்டாள் அவதார ஸ்தலம்.

பேறுபெற்றோர்-பெரியாழ்வார், மண்டுகரிஷி. தீர்த்தம்-திருமுக்குளம். சஞ்சன விமானம் இறைவி-ஆண்டாள் என்னும் கோதைநாச்சியார். இறைவன்—ஆலிலையில் துயில்வோன் என்னும் வடபத்திர சயனர், அரங்கமன்னார். இப்பதியைப் பாடியவர்கள் பெரியாழ்வாரும் ஆண்டாளும்.

(புத்தூர் என்பதால் இவ்வூர் புதுவை எனவும் வழங்கப் பெறுகிறது).

(49) இப்பாடல் திருக்குருகூரைப் பற்றியது. இதைத் திருநகர், ஆழ்வார்த்திருநகரி என்றும் அழைப்பர்; இத்தலம் ஆழ்வார் திருநகரி இரயில் நிலையத்தின் அருகில் உள்ளது. இது நம்மாழ்வார் அவதரித்த தலம், ஆதலால் ஆழ்வார் திருநகரி எனப்பெயர் வந்தது.

இத்தலத் திறைவனை வணங்கிப் பேறுபெற்றவர்கள் நாதமுனி, மதுரகவி, நம்மாழ்வார், சக்கரத்தாழ்வான் என்ற சேனை முதலி, பிரமன், பூமாதேவி. தீர்த்தம்-பிரம்மத்தடம், விமானம்-கோவிந்த விமானம். தேவி-குருகைமின் எனும் திருநகரிவல்லி. இறைவன்-ஆதிநாதன்.

இங்குள்ள திருப்புளி அடியில் நம்மாழ்வார் சந்நிதி மிகப் பிரபலம். குருகுஊர்-பறவைகள் மண்டிய, நீர் வளம் மிகுந்த ஊர்.

திருத்தொலைவில்லிமங்கலம்

ஒருபொரு ளாய்வரு ணன்கோ சிகற்கின் புதவுமிடம்
வருணச் செழுந்தட மோடுயர் கற்பவி மானந்தனில்
திருவொண் கருந்தடங் கண்ணி யுடன் குண திக்குநின்ற
மருவுங் கருங்கடல் வண்ணன் தொலைவில்லி மங்கலமே.(50

திருச் சீவரமங்கையூர்

கலங்காப் பெருநக ரெம்மா னுரோம மகாமுனிவன்
நலங்கா மனுய்யிந்திர வாவியுந்தன் வர்த்தகத்தின்
யிலங்கா யிழைப்பதி மங்கைய னன்கிழக் கேய்ந்திருந்த
புலங்கா ணுந் தேவபி ரான்சீ வரமங்கைப் புண்ணியனே.(51)

தவம் செய்ய இடம் தேடிய பிரமனுக்கு ஆகாசவாணி இவ்விடத்தைக்காட்டி (குரு-செய்) என்று கட்டளையிட்டபடியால் இது குருகூர் ஆயிற்று. மாறன்-நம்மாழ்வார். மன்நற் சக்கரன்-சக்கரத்தாழ்வார் எனும் சேனை முதலி. கோது அகல்-குற்றம் நீங்கிய (விமானம்). ஓத நின்றான்-பக்தர்கள் தன் புகழ்பாடும்படி நின்றான். இத்தலம் நம்மாழ்வாரால் பாடப்பெற்றது.

(50) இது திருத்தொலைவில்லி மங்கலத்தைப்பற்றிய பாடல். இது ஆழ்வார் திருநகரிக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளது. பேறு பெற்றோர்: வருணன், கோசிகன். வருண தீர்த்தம். கற்ப வீமானம். பிராட்டி-கருந்தடங்கண்ணி. சந்நிதி கிழக்கு. நின்ற கோலம். எம்பிரான்-கருங்கடல்வண்ணன்.

நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம். இன்பு-பேரின்பம்.

(51) இத்தலம் ஸ்ரீவரமங்கையாகும். இது திருச்சிரீவரமங்கை எனவும் பெறும். திருநெல்வேலியிலிருந்து 18 மைல் தொலைவில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள நாச்சியார் பெயர் கொண்ட திருப்பதி. அருள் பெற்றோர்: இந்திரன், ரோமச முனிவர். தீர்த்தம்-இந்திர புஷ்கரணி. விமானம்: நந்தவர்த்தகம். பதிமங்கை-ஸ்ரீவரமங்கை. கிழக்கு சந்நிதி. இருந்த திருக்கோலம். பெருமான்-தெய்வநாயகன். புலங்காணும்-அறிவினால் அறியக் கூடிய (பிரான்).

நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திருப்பதி. இப்பதியை வானமாமலை என்பர். பெருமாள்-வானமாமலைப் பெருமாள். தென்கலை வைஷ்ணவர்களுக்குப் பீடமாயுள்ள ஜீயர் மடமும் இங்குண்டு. இப்போது நாங்குனேரி என வழங்குகிறது.

திருப்பேரையூர்

புண்ணியன் வேதன் சிவனும்பர் யாவரும் போற்றவந்தோன்
திண்ண மருட்சுக்ர வாவி யொளிர்பத் திரவிருப்பில்
ஒண்ணிதி யார்குழைக் காதா னொடுகிழக் குற்றிருந்த
கண்ணன் முகில்வண்ணன் தென்திருப் பேரைநங் கண்மணி
யே. (52)

திருப்புளியங்குடியூர்

மணிவண்ண னுன்மறை யோடு நிருதிமுன் வந்தருள்வோன்
பிணிகொய் நிருதித் தடம்வேத சாரப் பிறங்கிருப்பில்
அணிகொளவ் வூர்வல்லிமன்கீழ்த் திசைபுவி யார்ந்துதுயில்
நணியன் புளியங் குடி காய்சின வேந்தன் நமர்களுக்கே. (53)

திருவரகுண மங்கையூர்

நமனுக்கஞ் சாரக் கினிக்கரு ளக்கினி நற்புனலில்
சமதமஞ் செய்து விசய விமானந் தனைவலஞ்செய்(து)
அமரப் பதிமங்கை கீழ்பாலு றுவிசை யாசனனுர்
தமதிருப் பைத்தண் வரகுண மங்கையிற் றுழ்ந்தவரே. (54)

---

(52) இப்பாடல் திருப்பேரையைப் பற்றியது. இதைத் தென் திருப்பேரை என்பர். இது ஆழ்வார்திருநகரியிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. திருப்பேரையில் என்பது தலத்தின் பெயர் என்று சிலர் கருதுகின்றனர்.

பேறு பெற்றோர்-பிரமன், ருத்திரன் இவர்கள். சுக்கிர புஷ்கரணி. பத்திர விமானம். பிராட்டி-குழைக்காதுவல்லி, கிழக்கு நோக்கிய சந்நிதி. வீற்றிருக்கும் திருக்கோலம். இறைவன் பெயர்-முகில் வண்ணன் என்ற மகர நெடுங்குழைக் காதர்.

இது நம்மாழ்வாரால் பாடப்பட்ட பதி. இவ்வூரைப்பற்றிய விவரங்கள் ஐயரவர்கள் பதிப்பித்த மகரநெடுங் குழைக்காதர் பாமாலை என்ற நூலில் காணப்பெறும்.

(53) இப்பாடல் திருப்புளிங்குடியைப்பற்றியது. புளியங்குடி என்பர். ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. அருள் பெற்றவர்: நான்மறை, நிருதி. தீர்த்தம்-நிருதித் தடம். வேதசார விமானம்- பிராட்டி—புளிங்குடி வல்லி. கிழக்கு சந்நிதி, சயனத் திருக்கோலம், எம்பிரான்-காய்சின வேந்தன்.

இது நம்மாழ்வார் பாடல் பெற்ற பதி.

(54) இப்பாசுரம் திருவரகுண மங்கையைப் பற்றியது. ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 1½ மைல் தூரத்தில் உள்ளது.

ஸ்ரீவைகுந்தம்

தாழாத செவ்வப் பிருதுமன் னிந்திரன் றன்முன் வந்தோன்
நீழாசறு தண்பிரு துப்புன லிந்திர நீடிருப்பில்
காழார்வை குந்தை யுடன்கீழ் திசைநின்ற கள்ளப்பிரான்
வாழாறு தாம்பர வன்னியி னுத்தர்தம் வைகுந்தமே. (55)

திருக்குளந்தை

வையம் புகழ்பற் குணன்பொன் னியமற்கும் வாய்ந்தருள்வோன்
மெய்யிந் திரத்தட மானந்தமென்னும் விமானந்தனிற்
செய்யம் புயக்குளந்தை மின்பிரான் குணதிக்குநின்றூன்
பொய்யில் குளந்தையின் வாழ்மாயக் கூத்தன்பொற் கோசிகனே.
(56)

நமனுக்கு அஞ்சார் என்பதை வரகுணமங்கையிற்றூழ்ந்தவர் நமனுக்கு அஞ்சார் எனக் கூட்டுக. அக்கினிதேவர்க்கு அருள் புரிந்தவன். அக்கினி தீர்த்தம். விஜய விமானம். சமதபம் செய்து-ஜபங்களைச் செய்து. பிராட்டி-பதிமங்கை; வரகுணவல்லி. கிழக்கு சந்நிதி. வீற்றிருக்கும் கோலம். விசயாசனன்.

இது நம்மாழ்வார் பாடல் பெற்றது.

(55) ஸ்ரீவைகுந்தத்தைப் பற்றிய பாடல் இது. இதைத் திருவைகுந்தம் என்பர். இத்தலம் ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையத்தினின்று அரை மைல் தொலைவில் உள்ளது.

பேறு பெற்றவர்-பிருது சக்கரவர்த்தி, இந்திரன். தீர்த்தம்—பிருகு தீர்த்தம். இந்திர விமானம். பிராட்டி-வைகுந்தவல்லி. கிழக்கு சந்நிதி. நின்ற திருக்கோலம். பெருமாள்-கள்ள பிரான் (வைகுந்த நாதன்) நதி-தாம்பரபர்ணி. தாழ்ஆர்-மனஉறுதி பொருந்திய. ஆத்தர்-ஆப்தர்.

இது நம்மாழ்வாரின் பாடல் பெற்றது. இத்திருப்பதியைச் சைவர்கள் திருக்கயிலை என்பர்.

(56) இப்பாடல் திருக்குளந்தையைப் பற்றியது. இத்தலம் பெரிய குளத்தையுடையதாதலின் பெருங்குளம் என்று வழங்குகின்றது. குளந்தை என்பது மரூஉ இது ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 7 மைல் தொலைவில் இருக்கிறது.

அருள்பெற்றோர்—அர்ச்சுனன், எமன், பிரகஸ்பதி. சுக்கிரனை வெள்ளி என்பது போல் பிரு உறஸ்பதியாகிய வியாழனை பொன் என்றார். தீர்த்தம்--இந்திரத் தடம். ஆனந்த விமானம்.

திருக்குறுங்குடி

கோசக னூறந் தணாக ளுருத்திர கோடிக்கருள்
வாசநற் பாற்கடல் வாவியொண் சீகர மானந்தனில்
ஆசில் பாற்கட லாள்பூர்வ நின்ற வழகநம்பி
யீசன் குறுங்குடி வாழ்பஞ்ச நம்பி யிறையவனே (57)

திருக்கோளூர்

இறைவன் மதுர கவிக்குந் தனதற்கு மின்பருள்வோன
நிறையுங் குபேரத் தடந்திரு மானத்தி னேர்கிழக்காரந்
துறையப் பதிவல்லி தன்னேடு பூங்கண் ணுறையும்பிரான்
மறைமுழுங் குந்திருக் கோளூர் வளர்வைத்த மாநிதியே (58)

பிராட்டி--குளந்தை வல்லி. கிழக்கு பார்வை. நின்ற கோலம். இறைவன் திருநாம்--மாயக்கூத்தன். வாய்ந்த--வாய்த்த; தானே முன்வந்த பொற்கோசிகன்--பீத அம்பரன்; மஞ்சள் பட்டாடை உடையவன். செய் அம்புயக் குளந்தை-செந்தாமரைபோன்ற குளந்தைவல்லி.

நம்மாழ்வார் பாடல் பெற்றது.

(57) இப்பாடல் திருக்குறுங்குடியைப் பற்றியது. இது திருநெல்வேலி இரயில் சந்திப்பிலிருந்து 27 மைல் தொலைவில் உள்ளது. குறுகியவனுன வாமனனது க்ஷேத்திரமாதலால் இதற்குக் குறுங்குடிஎனப் பெயர் வந்ததென்பர்.

இங்குப்பூசித்து அருள்பெற்றவர்--கோசிகன், நூறு அந்தணர் குள், பலருத்திரர்கள். தீர்த்தம்--திருப்பாற்கடல். ஸ்ரீகர விமானம். பிராட்டி-பாற்கடலாள், இலக்குமி தேவி. கிழக்கு சந்நிதி, நின்ற கோலம். ஈசன் திருநாமம் அழகநம்பி. இத்தலத்திறைவனுக்கு வைஷ்ணவநம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி, மலைமேல்நம்பி என ஐந்து வேறு பெயர்களும் உண்டு.

இராமாநுசரிடம் ஒரு சிஷ்யன் போல் வந்து வேதாந்தப் பொருள் கேட்ட படியால் இங்கு எம்பெருமானுக்கு வைஷ்ணவ நம்பி என்று பெயர். இத்தலத்து எம்பிரான் அநுக்கிரகத்தால் நம்மாழ்வார் திருஅவதாரம் செய்தனர். திருமங்கையாழ்வார் திருநாட்டிற்கு எழுந்தருளிய தலம்.

இத்தல இறைவனைப் பாடியவர் பெரியாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார்.

(58) இச்செய்யுள் திருக்கோளூரைப் பற்றியது. இது ஆழ்

திருவனந்தபுரம்

மானிதி யிந்திர னிந்துக் கருண்மச்ச வாவியுளோன்
கானல ராதி யிலக்குமி கொண்கண் கனகசபை
மான மதிற்குண பாற்றுயிற் றென்மலை நாட்டரசன்
ஆன வனந்தபுரம் பற்ப நாபன் அகளங்கனே. (59)

வார் திருநகரியிலிருந்து ஒரு மைலில் உள்ளது. நவநிதிகள் இங்கே ஒளிந்து கொண்டிருக்கின்றன என்று அதர்மம் குபேரனுக்குக் கோள் சொல்லிய இடமாதல் பற்றி இத்தலத்துக்குத் திருக்கோளூர் என்று பெயர் வந்தது என்பர். மதுரகவி ஆழ்வார் அவதரித்த தலம்.

பேறுபெற்றோர். மதுரகவி, குபேரன். தனதன்–குபேரன். இறைவன் என்றதை மாநிதியே இறைவன் என்று கூட்டி இயைக்க. தடம்–குபேரதீர்த்தம். திருமானம்-ஸ்ரீகரவிமானம். கிழக்கு சந்நிதி. சயனக்கோலம். பிராட்டி-அப்பதிவல்லி-கோளூர் வல்லி. இறைவன்-வைத்தமாநிதிப்பெருமாள். நம்மாழ்வாரால் பாடப்பெற்றது.

இதுவரை 18 பாடல்கள் பாண்டி நாட்டுத் திருப்பதிகளைப்பற்றியவை. இனிவரும் 14 பாசுரங்கள் மலைநாட்டுத் திருப்பதிகளைப்பற்றியவை. மலைநாட்டுத்திருப்பதிகள் 13 என்பதுடன் திருநாராயண புரத்தையும் சேர்த்து 14 ஆகப் பாடியுள்ளார்.

(59) முதலில் திருவனந்தபுரத்தைப் பற்றிக் கூறுகிறார்.

அருள்பெற்றோர். இந்திரன், சந்திரன். தீர்த்தம்-மச்சவாவி, விமானம்-கனகசவைமானம், பிராட்டி–ஆதிலக்குமி, சந்நிதி-கிழக்கு. சயனதிருக்கோலம். தென்மலைநாட்டு அரசன் பத்மநாபன். எம்பிரான் அகளங்கன்-களங்கமற்றவன். இது நம்மாழ்வாரால் பாடப்பெற்ற பதி.

திரிமூர்த்திகளில் சிவனும், பிரமனும் வணங்கப் பெற்ற திருமால். 'கேளார் சினந்த புரஞ்சுட்டான், திசைமுகத்தான் போற்றும் அனந்தபுரம்' என்றார் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும். பெருமாள் பாம்பணையில் பள்ளிகொண்ட பதிகள் பல இருப்பினும் அநந்தசயனம் என்பது இப்பதிக்கே உரிய சிறப்புப் பெயராகும்.

பெருமாள் உருவம் மிகப் பெரியது. இங்குள்ள கோவில், பெருமாள் உருவத்தை மூன்று வாயில்கள் வழியாகச் சேவிக்கும்படி அமைந்துள்ளது. முதல் வாயில் வழியாக திருமுகக் கமலத்தையும், இடைவாயில் வழியாகத் திருவுந்திக் கமலத்தையும் கடைவாயில் வழியாகத் திருவடிக்கமலங்களையும் சேவிக்கலாம்.

திருவண்பரிசாரம்

அகளங்க ராகிய காரி யுடையநங் கைக்கருள்வோன்
நிகழுந் திருப்புன லொண்கலி யாண நிலையிருப்பில்
திகழுந் திருமாபணங்கோடு கீழ்திசை சேர்ந்திருந்த
புகழ்இரு மார்பண்ணல் வண்பரி சாரப் புனிதனன்றே. (60)

திருக்காட்கரையூர்

புனிதன் கபிலன் புவிக்கரு ளுங்கபி லப்புனலோன்
நனியொளி ரும்புட் கலமான நீர் தன்னினன்னீர் வனசந்
தனிலுறை யும்பெருஞ் செல்வி யுடன்றக் கணத்தினின்றுன்
இனிய னெவற்குந்தென் காட்கரை மேவிய வென்னப்பனே.
(61)

திருமூழிக்களம்

அப்பங்கு மா கிய வேனன் மருத முனிவனுக்காய்
செப்பும் பதியில் வராதான் விசாலச் செழும்புனலோன்
மற்பங்கை யையோடு கீழ்த்திசைச் சந்திர மானம்நின்றுன்
ஒப்பொன்றின் மூழிக்களப்பூந் துழாய்முடி யொண்மயனே.
(62)

---

(60) இப்பாடல் திருவண்பரிசாரம் என்னும் திருப்பதியைப் பற்றியது. இது திருப்பதிசாரம் எனவும் படும். திருநெல்வேலி யிலிருந்து 40 மைலில் உள்ளது. நம்மாழ்வாருடைய தாயாரின் பிறந்தகம்.

பேறுபெற்றோர். காரி, உடையநங்கை. காரி-நம்மாழ்வாரின் தந்தை. உடையநங்கை-அவர் தாய். தீர்த்தம்-திருப்புனல், இலக்குமி தீர்த்தம், விமானம்-கல்யாண விமானம், பிராட்டியார் திருமார்பணங்கு, இலக்குமிதேவி. சந்நிதி-கிழக்கு. வீற்றிருக்கும் கோலம். எம்பிரான் பெயர்-திருவார்மார்பன். நம்மாழ்வார் பாசுரம் இதற்குண்டு.

(61) இப்பாடல் திருக்காட்கரையைப் பற்றியது. எர்ணு குளம் செறுவண்ணூர் இரயில் பாதையில் இடப்பள்ளி நிலையத்தி லிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது.

பேறுபெற்றோர்-கபிலமுனிவன், புவிமடந்தை. புனல்-கபில தீர்த்தம். விமானம்-புட்கலவிமானம், நீர்வனசம்-தாமரை, பிராட்டி -பெருஞ்செல்வநாயகி. சந்நிதி-தெற்கு நோக்கியது. நின்ற திருக் கோலம். இறைவன்-காட்கரையப்பன். இத்தலம் தென்காட்கரை எனவும் பெறும். இத்தலம் நம்மாழ்வாரால் பாடப்பெற்றது.

(62) திருமூழிக்களம் என்னும் பதியைப் பற்றியபாடல். இது

திருச்செங்குன்றூர்

ஒண்மகஞ் செய்தமூ வாயிரர் சங்கரற் குண்மைதந்தோன்
வண்மையஞ் சங்கத் தடஞ்செகச் சோதிவி மானந்தனில்
தன்மையஞ் செங்க மலையுடன் மேற்றிசை சார்ந்துநின்றான்
இண்மைத் திருச்செங்குன் றூரிமை யோரப்பன் சின்மயனே. (63)

திருப்புலியூர்

சின்மய னேழ்முனி யோருவ ணற்கருள் செய்த பிரான்
புன்மய னிக்குந் தளர்பூதன் வாவிப் புருடநிலைப்
பொன்மய மானத்திற் பொற்கொடி யாளொடு பூர்வநின்றான்
தன்மய மாயப் பிரான்றன் திருப்புலி யூர்த்தலமே. (64)

எர்ணகுளம்-செறுவண்ணூர் இரயில்பாதையில் கருக்குட்டி நிலயத்துக்கு 4 மைல் தொலைவில் உள்ளது.

அருள்பெற்றோர்-வேனன், மருதமுனி, ஹரித மகா முனிவர். இவர்கள் யாரென்பது விளங்கவில்லை, தீர்த்தம்-விசாலதீர்த்தம் அல்லது பெருங்குள தீர்த்தம். விமானம்-சந்திரமானம். பிராட்டி-மலர்மங்கையை-திண்மையுடைய வளப்பமான தாமரை மலரில் இருப்பவள். கிழக்கு சந்நிதி. நின்ற கோலம். அப் பெங்குமாகிய ஒப்பில் மூழிக்களம் என இயைக்க. நீரால் சூழப் பட்ட ஒப்பிலாத மூழிக்களம் என்க.

திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் பாடல் பெற்றதலம். துழாய்முடி-துளசிதளத்தாலாய கண்ணி. "புனத்துழாய்க் கண்ணிவேந்து". குசேலோபாக்கியானம்.

(63) இப்பாடல் திருச்செங்குன்றூரைப் பற்றியது. இதைச் செங்கனூர் சிற்றாறு என்பர். கொட்டாரக் கரையிலிருந்து 30 மைல் தூரத்தில் உள்ளது.

பேறுபெற்றவர்-யாகம் செய்த மூவாயிரவர், சங்கரன். தீர்த்தம்-சங்கதீர்த்தம். விமானம்-ஜகஜ்ஜோதி விமானம். பிராட்டி-செங்கமலவல்லி. சந்நிதி-மேற்கு. கோலம்-நின்றகோலம். பிரான்-இமையோர் அப்பன். நம்மாழ்வார் பாசுரம் இப்பதிக்குண்டு,

(64) இப்பாடல் திருப்புலியூர் தலத்தைப் பற்றியது. கொட்டாரக் கரையிலிருந்து 33 மைல் தொலைவில் உள்ளது. (இதுகுட்ட நாட்டைச் சேர்ந்தது)

அருள்பெற்றவர்-சப்தரிஷிகள், கருடன். உவணம்-கருடன். தீர்த்தம் பூதன்வாவி விமானம்-புருஷோத்தம விமானம். (புருட

திருநாவாய்

தலந்தாழ்ந் திறைஞ்சுங் கசேந்திரற் குஞ்சவரிக்குமருள்
மலந்தாழ் கமலத் தடத்தோன்றேல் வேத விமானந்தனில்
பொலந்தா மரைமலர் மங்கை யுடன்றிசை பூர்வநின்றான்
நலந்தா விய திரு நாவாய் நெடுந்திரு நாரணனே. (65)

திருவல்லவாழ்

திருமால்கண் டாகன ஞாய வாணிமண் டேவிக்கருள்
அருமா லுயர்செங் கழுநீர்த் தடஞ்சது ரானனமாய்
வருமானஞ் செல்லக் கொழுந்தொடு கீழ்திசை மன்னிநிற்கும்
பெருமாயக் கோலப் பிரான்வல்லை வாழெம் பிரானடியே. (66)

நிலை. நாச்சியார்–பொற்கொடி நாச்சியார். கிழக்கு சந்நிதி. நின்ற திருக்கோலம். எம்பிரான்–மாயப்பிரான்.

திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் பாடிய திருப்பதி.

(65) திருநாவாய் என்ற திருப்பதியைப் பற்றிய பாடல் இது. இது செறுவண்ணூர் கள்ளிக்கோட்டை இரயில் பாதையில் திரு நாவாய் நிலையத்துக்குத் தெற்கே பாரத்புழை என்ற ஆற்றங் கரையிலுள்ளது.

பேறுபெற்றோர்–கஜேந்திரன், சவரி (சபரி), மலம்தாழ்–மும் மலங்களையும் நீக்குகின்ற (கமலசரசு) தீர்த்தம்-கமலசரசு. வேத விமானம். பிராட்டி–மலர்மங்கை நாச்சியார். கிழக்கு-சந்நிதி. நின்ற திருக்கோலம். நலம்தாவிய–நலம்பொங்குகின்ற. (திருநாவாய்) பெருமாள்–திருநாராயணப் பெருமாள்.

திருமங்கை மன்னனும், நம்மாழ்வாரும் பாசுரம் பாடியதலம். நாவாய் என்பது படகு. பிறவிக்கடலைக் கடக்க உதவும் புணை. சீர்காழியைத் தோணிபுரம் என்பது போல.

(66) இது திருவல்லவாழ் எனும் திருப்பதியைப் பற்றியது. இது திருவல்லா என்வழங்கும் திருப்பதி. கொட்டாரக்கராவிலி ருந்து 36 மைல் தொலைவிலுள்ளது

பேறுபெற்றவர்-கண்டாகர்ணன். ஆகாயவாணி; மண்தேவி (பூமகள்). தீர்த்தம்–செங்கழுநீர்த்தடம். விமானம்-சதுரங்க கோல விமானம், நாச்சியார்-செல்வத்திருக்கொழுந்து பிராட்டி யார். கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். பெரு மாள்-கோலப்பிரான்.

திருமங்கையாழ்வார் பாசுரம் அருளியது.

திருவண்வண்டூர்

அடியேன் சரண மெனுநா ரதன்சமு சாரமறும்
படியே புரிந்தருள் வோன்பம்பை யுத்தரப் பைந்தடத்தோண்
வெடிசேர் கமலை யுடன்தேவ கூட்டத்தின் மேற்குநின்ற
வடிவார் திருவண்வண் டூர்கடல் மேனிப் பிரான்வள்ளலே.
(67)

திருவாட்டாறு

வள்ளற் பரசுடை ராமனிந் திந்திரன் வாழ்த்தும்பிரான்
தெள்ளிய ராமப் புனலாரட் டாக்கரச் சேணிருப்பின்
ஒள்ளயிற் கட்டிரு மங்கையன் மேற்கி னுவந்து துயில்
கொள்ளு மங்கேசவன் வாட்டாறு மேய கொழும்புயலே. (68)

---

(67) திருவண்வண்டூரைப் பற்றிய பாசுரம் இது. இதைத் திருவமுண்டூர் என அழைப்பர். கொட்டாரக் காராவிலிருந்து 35 மைல்–பம்பாநதியின் வடகரையில் உள்ளது.

அருள் பெற்றவர்-நாரதர். தீர்த்தம்–பம்பா நதியின் வடகரை யில் உள்ள பைந்தடம். வெடி-வாசனை. விமானம்-வேதாலய விமா னம். பிராட்டி-கமலவல்லி. மேற்கு பார்த்த சந்நிதி. நின்ற கோலம். வடிவார்-அழகு பொருந்திய. பெருமாள்-கடல்மேனிப் பிரான்.

நம்மாழ்வார் பாடல்பெற்ற திருப்பதி. 'வண்' என்பது திருவண் பரிசாரம், திருவண்புருடோத்தமம் என்பதிற்போல, அடை மொழியே என்பர்.

(68) திருவாட்டாறு திருப்பதியைப் பற்றிய பாசுரம் இது. திருவனந்தபுரத்திலிருந்து 28 மைலில் உள்ளது. இத்தலம் வாட் டாறு எனும் நதியால் பெயர் பெற்றது.

பேறுபெற்றவர்–பரசுராமன், சந்திரன், இந்திரன். தீர்த்தம்– ராமப்புனல், விமானம்–அஷ்டாக்கர விமானம். ஒள்ளயில்கண்-ஒளி பொருந்திய வேல்போன்ற விழி. பிராட்டி-திருமங்கை. மேற்கு நோக்கிய சந்நிதி. துயில் திருக்கோலம். எம்பிரான்-ஆதிகேசவப் பெருமான். இத்தலத்தை நம்மாழ்வார் பாடியுள்ளார்.

திருவித்துவக்கோடு

கொழுஞ்செல் வமாரம்ப ரீடனுக் கின்பங் கொடுத்தபிரான்
செழுஞ்சு தரிசன வாவிசந் தோடச் சினகரத்தில்
தொழுஞ்செய்ய தாமரைக் கையா ளுடன்றென் றுயிலமர்ந்தான்
எழுஞ்சொ லபையப் பிரதானன் வித்துவக் கோட்டெந்தையே.
(69)

திருக்கடித்தானம்

எந்தை யெனுருக்கு மாங்கத வேந்தற் கியைந்தருள்வோன்
வந்த வினையறும்பூமித் தடம்புண்ணிய மானந்தனில்
கொந்தலர் கற்பக வல்லிக்கின் பேந்து குணக்கினின்றான்
நந்தித் திருக்கடித் தானத்தி லற்புத நாரணனே. (70)

---

(69) திருவித்துவக் கோடு என்னும் திருப்பதியைப் பற்றிய பாடல் இது. பட்டாம்பி இரயில் நிலையத்திலிருந்து 1 மைல் தொலைவில் ஆற்றங்கரையில் உள்ளது.

அருள் பெற்றோர்-அம்பரீசன். கொழும் செல்வம் ஆர்-மிகுதி யான செல்வம் பொருந்திய. தீர்த்தம்-சுதர்சன வாவி அல்லது சக்கர தீர்த்தம், விமானம்—சந்தோடச் சினகரம். பிராட்டியார்–தாமரைக் கையாள். தெற்கு நோக்கிய சந்நிதி. வீற்றிருக்கும் திருக்கோலம். பெருமாள்-அபயப்பிரதானன்.

குலசேகராழ்வாரால் பாடப்பட்ட தலம் இது.

(70) திருக்கடித்தானம் என்ற தலத்தைப் பற்றிய பாசுரம் இது. அம்பலப்புழாவிலிருந்து 23 மைலில் உள்ளது.

பேறு பெற்றோர்-ருக்மாங்கத வேந்தன். தீர்த்தம்-பூமி தீர்த்தம். விமானம்—புண்ணியகோடி விமானம், நாச்சியார்–கற்பக வல்லி. குண திசை நின்றான்–கிழக்கு நோக்கிய சந்நிதி. நின்ற திருக்கோலம். நந்தி—விரும்பி (நின்றான்). பெருமாள்-அற்புதநாராயணன். கொத்து எதுகை நோக்கி கொந்து என மெலித்தல் விகாரம் பெற்றது. நம்மாழ்வாரால் பாடப்பெற்றது. (திருமயிலை அம்பிகைக்குக் கற்பகவல்லி எனும் பெயர் இருப்பது போல, இப்பதியிலுறையும் நாச்சியாருக்குக் கற்பகவல்லி எனும் திருநாமம் உள்ளது குறிப்பிடத்தக்கது).

திருவாறன் விளை

அற்புத மற்புத வேதனுக் கின்ப மளித்தபிரான்
நற்புனல் வாமன வாவியன் வாமன நல்லிருப்பின்
உற்பலக் கட்பது மாசனை யோடுத் தரத்தினின்ற
மற்பெரும் பாம்ப ணையப்பனதொல் லாறன் விளைதொழுமே. (71)

திருநாராயணபுரம்

வளைமதி முக்குவ ணன்கண்ணன் ராமன் மருவுமன்பு
விளையஞ் சுமேத சரிமேத சூக்கும வியன்றருமால்
தளைகலி யாணத் தடமானந் தக்கண திக்கினின்ற
அளகிரி வல்லிசெல் வன்றிரு நாராண ணூர்புரமே. (72)

---

(71) இப்பாசுரம் திருவாறன் விளையைப்பற்றியது. இது கொட்டாரக்கராவிலிருந்து 37 மைலில் உள்ளது.

பேறு பெற்றோர்—பிரமன். தீர்த்தம்-வாமனவாவி. விமானம்-வாமன நல்லிருப்பு. உற்பலக்கண்-கருங்குவளை போன்ற கண்ணை யுடைய (பத்மாசனத்தில் இருக்கும் இலக்குமி) நாச்சியார்—பத்மா ஸன நாச்சியார். வடக்கு சந்நதி. நின்ற திருக்கோலம். இறைவன் பெயர்-பாம்பணையப்பன். 'தொல் ஆறன் விளைதொழுமே அற்புதம் அற்புதம்' என இயைக்க. வேதன் என்பதை வேதவியாசன் என் றும் சொல்லுவர்.

இது நம்மாழ்வாரால் பாடப்பட்ட திருப்பதி.

(72) இப்பாசுரம் திருநாராயணபுரத்தைப் பற்றியது. ஆழ் வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெருத ஆனால் ஆழ்வார் ஆசாரியர்களின் திருவவதாரம் முதலிய சம்பந்தங்களினால் ஏற்றம் பெற்ற தலங்களில் இதுவும் ஒன்று. மேல்கோட்டை என்றும் இதைச் சொல்வர். மேல்நாட்டில் (தற்போதைய கர்நாடக நாட் டில்) உள்ளது. செல்வப்பிள்ளை எழுந்தருளிய தலம். இராமாநுசர் திருநாராயணன் செல்வப்பிள்ளை என்ற இவர்கட்குச் சந்நிதி முதலியன நிர்மாணம் செய்து செல்வப்பிள்ளையை எழுந்தருளப் பண்ணி உத்ஸவாதிகளை யெல்லாம் நடப்பித்தருளினர். நாரா யணாத்ரி, வேதாத்திரி, யாதவாத்திரி, யதிசைலம் என்றும் மறு பெயர்களையுடைய பிரசித்தமான தலம் இது.

பேறு பெற்றோர்.—கருடன். கண்ணனும் இராமனும் தரிசித்த தலம் என்பர் இவ்வாசிரியர். கல்யாண தீர்த்தம்—கல்யாண விமா னம். தெற்கு சந்நிதி, நின்ற கோலம், நாச்சியார் அழகிரிவல்லி, திருநாரணனூர் என்ற செல்வநம்பி எழுந்தருளிய திருப்பதி.

திருவயிந்திரபுரம்

புரந்தர நம்பன் அயன்மார்க் கண்டேயன் புலிபிருகு
நிரந்தர மும்விர சைப்புனற் சந்திர நீடிருப்பில்
தரங்க முகந்த தனிபூருவ மூவுருத் தன்னினின்று
வரந்தரு நன்னடு நாட்டயிந் திரத்ததெய் வநாயகனே. (73)

திருக்கோவலூர்

அகநெகிழ் வாமுத லாழ்வார்க ளம்மிரு கண்டன்பலி
மகிழவங் தோன்புங்க வாவியுஞ்சிகரமான முஞ்சீர்
திகழவம் போருகப் பூங்கோவி லாள்குண திக்கினின்றுன்
மிகவு மிடைகழி யங்கோ வலூர்த்திரி விக்கிரமனே. (74)

இதுவரை மலைநாட்டுத் திருப்பதிகள் பதினுன்கும் கூறப் பட்டன.

(73) இனி நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டையும் குறிப் பிடுகிறுர்.

திருவயிந்திரபுரம் என்னும் திருப்பதியைப் பற்றிய பாடல் இது. தென்னுற்காடு ஜில்லாவில் திருப்பாதிரிப் புலியூர் நிலையத் துக்கு மேற்கே 3 மைல் தொலைவில் உள்ளது.

பேறுபெற்றேர்-இந்திரன், சிவன், அயன், மார்க்கண்டேயன், வியாக்கிரபாத முனிவர், பிருகு முனிவர். தீர்த்தம்-விரசைப் புனல், விரசை—தர்ப்பை. சந்திர விமானம். கிழக்கு சந்நிதி. நின்ற கோலம். பிராட்டி-வைகுண்டநாயகி. இறைவன்-தெய்வநாயகன். நம்பன்-சிவன். அஹீந்திரன் என்னும் அநந்தாழ்வான் பூசித்த தலமாதல் பற்றி இதற்கு அயிந்திரபுரம் என்னும் பெயர் வந்தது.

திருமங்கையாழ்வார் பாடல்பெற்றது.

(74) இது திருக்கோவலூரைப் பற்றிய பாடல். இது காட் பாடி-விழுப்புரம் இரயில் பாதையில் திருக்கோயிலூர் நிலையத் துக்கு மேற்கே 2 மைல் தொலைவில் உள்ளது.

அருள்பெற்றேர்; முதலாழ்வார்கள், மிருகண்டுமுனி. முதலாழ் வார் மூவரும் சந்தித்து மூன்று அந்தாதிகளையும் பாடி, பின்பு நெடுங்காலங் கழித்துத் திருநாட்டுக் கெழுந்தருளிய தலம். தீர்த்தம்-புங்கவாவி. விமானம்-சிகர விமானம். பிராட்டி-பூங்கோ வல் நாச்சியார். கிழக்கு சந்நிதி. நின்ற கோலம். இத்தலத்துக்கு இடைகழி என்றும் ஒரு பெயருண்டு. இறைவன் நாமம்-திரிவிக்ர மன் கோபாலன்.

திருஅத்தியூர்

விக்கிர மத்தைம் புலமறுத் தேற்றுதி வேந்தற்கருள்
வைக்குமனந்தச் சரசோன்குகையொண் விமானத்தெழின்
மிக்கரி தேவியுடனத்தியூர்க் கச்சி மேற்கிருந்த
மைக்கடல் சூழ்தொண்ட மண்டலச் சிங்கப் பிரான்நெஞ்சே.
(75)

திருஅட்டபுயகரம்

நெஞ்சேகசேந்திர னுக்கரு ளப்பெயர் நேர்தடத்தோன்
மஞ்சே யுலவுங் ககனுக் கிருதவி மானந்தனிற்
செஞ்சேல்விழியலர் மேன்மங்கை யான்பச் சிமத்தினின்றுன்
அஞ்சே வருட்சக் கரபாணி யட்டபுய மேகரனே. (76)

இது பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

ஆயனுர் எழுந்தருளியிருக்கும் திவ்ய தலமாதல் பற்றி இதற்கு 'திருக்கோவலூர்' என்று திருநாமமாயிற்று.

(75) இது முதல் 22 பாடல்கள் தொண்டை நாட்டுத் திருப்பதிகளைப் பற்றியது.

இப்பாடல் திருஅத்தியூரைப் பற்றியது. அத்தியூர் காஞ்சிபுரத்திலிருந்து 2 மைல். இது திருக்கச்சி-அத்திகிரி எனவும் வழங்கும். கோயில் (ஸ்ரீரங்கம்). திருமலை (திருவேங்கடம்). பெருமாள் கோயில் (அத்தியூர்) ஆகிய வைணவ முக்கியத் தலங்கள் மூன்றனுள் இதுவொன்று.

பேறுபெற்றோர்-வேந்தன் எனப் பொதுப்படக்கூறியுள்ளார். இவ்வேந்தர் யார் எனத் தெரியவில்லை. தீர்த்தம்-அனந்த சரஸ். விமானம்-குகை போன்ற விமானம். பிராட்டி-அரிதேவி. மேற்கு சந்நிதி. வீற்றிருக்கும் திருக்கோலம். பெருமாள்-சிங்கப்பிரான்.

ஐராவதம் என்னும் யானையே மலையுருவாகி எம்பெருமானைத் தாங்கினமையால் இது அத்திகிரி அத்தியூர் என்றாயிற்று. அத்திகிரியின் அடிவாரத்தில்உள்ள அழகிய சிங்கப்பெருமாளே மங்களாசாசனம் பெற்றவர் என்று சிலர் கூறுகின்றனர்.

இது திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வாரால் பாடப்பெற்றது.

(76) இப்பாடல் திருஅட்டபுயகரத்தைப் பற்றியது. காஞ்சிபுரத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது.

பேறுபெற்றோர்: கசேந்திரன். தீர்த்தம்-கசேந்திர புஷ்கரணி.

திருவேளுக்கை

கரவிற் சனகர் முதலோர் பிருகுங் களிக்க வந்தோன்
இரணிய வாவி யுடனே விமான மிரண்ணி யத்தில்
அரவிந்த லக்குமி தன்னொடு கீழ்த்திசை யார்ந்துநின்றான்
பரன்முகுந் தன்றிரு வேளுக்கை யாளரிப் பைம்பொருளே. (77)

திருப்பாடகம்

பொருவருங் கோகுல மாமுனிக் கின்பம் புரிந்தபிரான்
துரிசி லரித்திர வாவியும் பாண்டவ தூதபத்திரம்
திருசத்திய பாமை யுருக்கு மிணிகுண திக்கிருந்தே
யருடிருப் பாடகப் பாண்டவ தூதனெம் மச்சுதனே. (78)

மஞ்சுஉலவும்-மேகங்கள் உலவுகின்ற. மேக மண்டலத்தளவு உயர்ந்துள்ள ககனக்ருதவிமானம். சேல்விழி-மீன்போன்ற கண்களையுடைய (அலர்மேல்மங்கை). பிராட்டி-அலர்மேல்மங்கை. மேற்கு நோக்கிய சந்நிதி. நின்றகோலம், அஞ்சேல் அருள்-அஞ்சவேண்டாம் என்று அருள்கின்ற. பெருமாள் - அட்டபுயகர சக்கரபாணி. இங்குள்ள பெருமாளுக்கு எட்டு திருக்கைகள் உள்ளன. அதுபற்றி இத்தலமும் அட்டபுயகரம் எனப்பட்டது.

இத்தலத்தைப் பாடியவர் திருமங்கையாழ்வாரும், பேயாழ்வாரும்.

(77) *இப்பாடல் திருவேளுக்கை என்ற திருப்பதியைப் பற்றியது. இது காஞ்சிபுரத்திலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது.*

பேறுபெற்றோர்-சனகன், முதலிய நால்வர், பிருகுரிஷி. கரவில் சனகன்-ஒளித்தல் இல்லாத தூய்மையான. தீர்த்தம்- இரணியவாவி என்னும் கனகசரஸ். இரணியம்-கனகம், தங்கம். விமானம்-இரணிய விமானம் என்னும் கனக விமானம். பிராட்டி-அரவிந்த லக்குமி. சந்நிதி-கிழக்கு. நின்றகோலம். எம்பிரான்-திருவேளுக்கையாளர் என்னும் முகுந்த நாயகன். பரன்-பரம் பொருள் இப்பைம்பொருள்-இங்கு எழுந்தருளியுள்ள அழகிய மூர்த்தி. பை-அழகிய. ஆள் அரிப்பைம்பொருள்-நரன்கலந்தசிங்கம். இத்தலத்துப் பெருமாள் பெயர்-ஆள் அழகிய சிங்கர்.

இத்தலத்தைப் பாடியுள்ளவர் திருமங்கையாழ்வாரும்; பேயாழ்வாரும்.

(78) *திருப்பாடகம் என்னும் தலத்தைப் பற்றிய செய்யுள் இது. காஞ்சிபுரத்திலிருந்து 1 மைல் தொலைவில் உள்ளது. பாண்டவபெருமாள் கோயில் தெருவில் உள்ளது.*

திருநீரகம்

அச்சுத கண்ணவென் றேத்திய காந்தினி யாள்மகனுக்(கு)
இச்சைதந் தோனக்கு ரூரப்புன லு மிரவிதனில்
உச்சித நீரக வல்லி யுடன்கிழக் குற்றுநின்றான்
பச்சை வடந்துயி லுந்திரு நீரகப் பண்ணவனே. (79)

பேறுபெற்றவர்-கோகுல மாமுனி. இவர் யாரென்பது புலப் படவில்லை. தீர்த்தம்-அரித்திர வாவி. விமானம்-பாண்டவ தூத பத்ர விமானம். பிராட்டி-ருக்குமிணி, சத்தியபாமா. சந்நிதி-கிழக்கு. கோலம்-வீற்றிருக்கும் கோலம். எம்பெருமான்-பாண்டவ தூதன். துரிசு-துன்பம்.

இக்கோயில் கல்வெட்டுக்களில் எம்பெருமான் பெயர் தூத ஹரி என்றுள்ளது.

இத்தலத்தைப் பாடியவர் திருமங்கையாழ்வார், திருமழிசை யாழ்வார். பூதத்தாழ்வார், பேயாழ்வார்.

(79) இச்செய்யுள் திருநீரகம் என்ற திருப்பதியைப் பற்றி யது. காஞ்சிபுரத்திலிருந்து ¾ மைல் தொலைவில் உள்ளது.

பேறுபெற்றோர். காந்தினியாள் மகன்-அக்ரூரர். தீர்த்தம்-அக்ரூரப்புனல். விமானம்-இரவி (சூர்ய விமானம்). பிராட்டி-நீரகவல்லி. சந்நிதி-கிழக்கு. கோலம்-நின்ற கோலம். (பாகவதம் 3-ஆவது ஸ்கந்தம், கண்ணன் சரித்திரம்-செய். 16 "காதினி புதல் வனைக் கஞ்சன் விட்டதும்") பச்சைவடம் துயிலும் பண்ணவன்; பச்சைஆலிலையில் துயில்கின்ற பிரான்.

என்றும் பதினாறாக நெடிய காலம் வாழும்படி நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேய முனிவன் பத்திர நதிக்கரையில் தவம் புரிந்து பிரியைக் காட்சியைக் காணுமாறு நரநாராயணர்களால் அநுக்கிரகிக்கப்பெற்று. பின்பு மாலவன் மாயையால் மகாப்பிரள யம் தோன்ற, அப்பிரளயப் பெருங்கடலில் அலைப்புண்டு வருந்திய அம்மார்க்கண்டேய முனிவனுக்கு அவ்வெள்ளத்தில் ஆலிலையின் மீது ஒரு குழந்தை வடிவமாய் அறிதுயிலமர்ந்த பிரான். இறை வன் பெயர் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

திருமங்கையாழ்வார் பாசுரம் பெற்ற தலம்.

திருநிலாத்திங்கள் துண்டம்

நீரணி யுஞ்செஞ் சடையர ஞர்க்கருள் நித்தனுயர்
பேரணி யுஞ்சந் திரத்தடஞ் சஞ்சனப் பேரிருப்பில்
காரணி கூந்த லுறைவல்லி மேற்கிற் கலந்துநின்றான்
தேரணி சேரும் நிலாத்திங்கட் டுண்டச் செழும்பொருளே. (80)

திருஊரகம்

துண்டப் பிறையெயிற் றார்சேட னுக்கரு டுய்யன்மலர்
வண்டண்பொ னூர கத்தடஞ் சீகர மானத்தருட்
கொண்டல் அருணவல் லிக்கன்பன் மேற்கிற் குலாவிநின்றான்
அண்டர்க் குலகளந் தானூ ரகத்தி னருட்கடலே. (81)

---

(80) இப்பாடல் திருநிலாத்திங்கள் துண்டம் என்னும் திருப்பதியைப் பற்றியது. காஞ்சிபுரத்திலிருந்து 1 மைல். இத் திருப்பதி பெரியகாஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலுக்குள் முதல் சுற்றில் உள்ளது.

பேறுபெற்றோர்-சிவபெருமான். நீரணியும் செஞ்சடை அரனார்—கங்கையைச் செஞ்சடையில் அணிந்த சிவன். நித்தன்—தோற்றமும் முடிவும் இல்லாதவன். தீர்த்தம்...சந்திரபுஷ்கரணி. விமானம்-சஞ்சனப்பேரிருப்பு. கார் அணி கூந்தல்—மேகம் போல் விளங்கும் கூந்தல். உறை-உறையும் கூந்தலை ஏந்தும்,வல்லிக்கொடி போன்ற பிராட்டி. மேற்கு சந்நிதி. நின்ற கோலம். எம்பெருமான்-நிலாத்திங்கள் துண்டத்தான். தேர் அணி சேர்—தேர்ந் தெடுத்து அணிகள் பூண்ட. பதின்மூன்றும் போர்நாளிரவில் அர்ச்சுனன் கைலாயயாத்திரை சென்றான். கண்ணனது திருவடிகளில் இட்டு அருச்சித்த மலர்கள் சிவபிரானது முடிமேல் இருத்தலை ஆங்குக் கண்டான். அம்மலர்கள், சடையின் மேல் சிவபிரான் அணிந்துள்ள இளம் பிறைச்சந்திரனுக்கும் மேலே இருந்தன, 'தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்' சேர்த்திய வையே சிவன் முடிமேல்தான் கண்டுபார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான்' என்று நம்மாழ்வாரும் இச்சரிதத்தில் ஈடுபட்டுள்ளனர்

திருமங்கையாழ்வார் பாடல் பெற்ற தலம்.

(81) இப்பாசுரம் திருஊரகம் பற்றியது. இது காஞ்சிபுரத்திலிருந்து ¾ மைல் தொலைவில் உள்ளது.

பேறுபெற்றோர், ஆதிசேடன். துண்டப்பிறை எயிற்றார்—பிறைச்சந்திரனைப் போல வளைந்த வெள்ளிய பற்களையுடைய (ஆதி

திருவெஃகா

கடல்வைய நெய்தக ளாயிட்ட வன்கணி கண்ணற்கருள்
தடநெடும் பொய்கைத் தடம்வேத சாரத் தனியிருப்பில்
மிடலெழிற் கச்சி யிலக்குமி யாளன்கண் மேற்கிற்றுயில்
சுடர்தன் வெஃகாவினிற் சொன்னவண் ணஞ்செய்த சுந்தரனே
(82)

சேடன்). துய்யன்-பரிசுத்தமானவன். தீர்த்தம்-உரக (நாக) தீர்த்தம். மலர்வண்டண்பொன் ஆர்-வாசனைபொருந்திய அழகுடன் கூடிய (தடம்). விமானம்-சீகர (ஸ்ரீகர) விமானம். பிராட்டியார்-அருணவல்லி. மேற்கு சந்நிதி, நின்ற கோலம், பெருமாள்-உலகளந்தபெருமாள். அண்டர்க்கு-தேவர்களுடைய துன்பத்தைத் துடைக்க.

இத்தலத்தைப் பாடியவர் திருமழிசையாழ்வாரும், திருமங்கையாழ்வாரும். இத்தலத்தில் இறைவன் உரகரூபியாய் இருப்பது பற்றி இத்திருப்பதிக்கு ஊரகம் என்ற பெயர் போலும்.

(82) இப்பாடல் திருவெஃகா என்னும் தலத்தைப் பற்றியது. காஞ்சிபுரத்திலிருந்து 2 மைல். இங்கு எம்பெருமான் பிரமதேவன் செய்த வேள்வியையழிக்க வந்த வேகவதி நதியைத் தடுத்தற்பொருட்டு அதற்கு அணையாகக் குறுக்கிற் பள்ளி கொண்டருளிய வனுதலால் அப்பிரானுக்கு வேகவணை என்று பெயராயிற்று. அதுவே வேகணை, வெகாகணை, வெஃகா எனவாயிற்று என்பர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

பேறுபெற்றோர்-பொய்கையாழ்வார், கணிகண்ணன். தீர்த்தம்-பொய்கை புஷ்கரணி. இந்தப் புஷ்கரணியில் தான் பொய்கையாழ்வார் அவதாரம். விமானம்-வேதசாரமானம். பிராட்டியார்-கச்சிஇலக்குமி, சந்நிதி-மேற்கு. கோலம்-சயனம். பெருமாள்-சொன்னவண்ணம் செய்த பெருமாள். (யதோத்காரி சந்நிதி) எம்பெருமான் கணிகண்ணன் சொற்படி உடன்சென்றதால் இப்பெயர் ஏற்பட்டது. (யதோக்தாரி-சொன்னவண்ணம் செய்தவன்) மிடன்-சந்திரன்- கடலும் வையமும் முறையே நெய்யும் தகளியாகவும் பாடியவர் பொய்கையாழ்வார்.

திருமழிசையாழ்வார். பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் பாடல் பெற்றது.

திருக்காரகம்

செய்த மலரணி பிருகுவின் முன்பு திகழ்ந்தருள்வோன்
மெய்தவ ஞானத் தடத்தோன் விசுத்த விமானந்தனில்
செய்தலங் கண்ணி ரமாமணி கீழ்திசை நேர்ந்து துயில்
எய்தபி ரான்கருணாகரன் காரகத் தென்னப்பனே. (83)

திருக்கார்வானம்

என்னப்ப னம்பிகைக் கின்பரு ளப்பன் எவர்க்கருளும்
முன்னப்பன் மொய்க வுரித்தட ஊரிக் கருடன்வெற்பில்
மின்னப்ப ணெண்கம லத்திருப்ப பங்கின் வடக்கிருந்த
பன்னப்பன் கள்வன்றன் கார்வானம் வாழ்பரந் தாமப்பனே.
(84)

---

(83) இப்பாடல் திருக்காரகத்தைப் பற்றியது. காஞ்சிபுரத்திலிருந்து ¾ மைல்.

